வைப்பகம்

2017 மாச்சு - ஏப்பிறல் மலர் 02 இதழ் 3 - 4

அறிவுத் தேடலின் மையம்

ரூபா 20/-

02 வரிச் செலவினம்: கவனமான பகுப்பாய்வுகள் எமக்கு ஏன் தேவைப்படுகின்றன

05 நீடித்துநிலையான வளர்ச்சியை நோக்கிய அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி

18 உறுதிப்பாடு மற்றும் மீளெழுச்சிக்கான இறை இடைவெளி

ISSN 2513-3012

இலங்கை மத்திய வங்கி

தொடர்பூட்டல் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிச் செலவினம்: கவனமான பகுப்பாய்வுகள் எமக்கு ஏன் தேவைப்படுகின்றன

கே. ஏ. யு. எஸ். கே. திலகரத்ன
மூத்த பொருளியலாளர் மற்றும்
தலைவர், அரச நிதிப் பிரிவு
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

வரிச் செலவினங்கள்

வரிச் செலவினங்கள் என்பது குறித்துரைக்கப்பட்ட துறைகள், நடவடிக்கைகள், பிராந்தியங்கள் அல்லது முகவர்களின் வேறுபட்ட தன்மை அல்லது முன்னுரிமை நடவடிக்கைகளின் பெறுபேறாகத் தீர்மானிக்கப்பட்ட அரசாங்கத்தின் வருமானங்களாகும். அவை, படிகள் (அடிப்படையிலிருந்தான கழிவுகள்), விலக்கல்கள் (அடிப்படையிலிருந்து நீக்கப்பட்டவை), வரி வீத நிவாரணங்கள் (குறைந்த வீதம்), வரவுகள் (பொறுப்பில் கழித்தல்கள்) மற்றும் வரி பிற்போடப்படுதல் (கொடுப்பனவுகளைப் பிற்போடுதல்)[1] என்பன உள்ளிட்ட பல வடிவங்களில் காணப்படலாம். ஐக்கிய இராச்சியத்திலுள்ள தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்படி, வரிச் செலவினம் என்பது சமூக அல்லது பொருளாதாரக் கொள்கையினால் தூண்டப்பட்ட வரி விதிகளின் ஏற்பாடொன்றாகும். இது குறிப்பிட்ட வரி செலுத்தும் தொகுதியினருக்கு உதவும் பொருட்டு அல்லது குறிப்பிட்ட நடவடிக்கையினை ஊக்குவிக்கும் பொருட்டு வரி விதிக்கத்தக்க நிறுவனத்தின் வரிப் பொறுப்பினைக் குறைப்பது அல்லது பிற்போடுவதுடன் இதனை இந்நோக்கத்திற்காக நேரடிச் செலவினங்களின் முறைமையின் மூலம் அகற்றவும் முடியும். வரிப் பொறுப்பில் குறைப்புக்களை ஏற்படுத்துவதற்கான உரித்தின் போது வரிச் செலவினமொன்று ஏற்படுகின்றமையானது, பண்புத்தன்மையினைக் குறித்துரைக்கின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கையொன்றினை மேற்கொள்வதற்கு அல்லது கைவிடுவதற்கான தேர்வுச் செயன்முறையில் வரி விதிக்கத்தக்க நிறுவனத்தின் மீதான நிபந்தனையாக இருக்கின்றது".[2]

வரிச் செலவினங்களின் மதிப்பீட்டு முறையியல்கள்

வரிச் செலவினத்தினை மதிப்பிடுவதற்கு மூன்று வேறுபட்ட அணுகுமுறைகள் காணப்படுகின்றன.[3]

1. முன்னமேயே தீர்மானிக்கப்பட்ட அரசிறை அணுகுமுறை: இவ்வணுகுமுறையானது குறிப்பிட்ட வரிச் சலுகைகளைப் பெறுகின்ற வரிச் செலுத்துவோரினால் செலுத்தப்படும் வரிக்கும் வரிச் சலுகைகளைப் பெறாத இதையொத்த வரிச் செலுத்துபவர்களுக்குமிடையேயான வேறுபாட்டினை அளவிடுகின்றது. இது வரி செலுத்துவோரின் நடத்தை மாறவில்லை என்ற எடுகோளின் அடிப்படையில் அடித்தள அளவீட்டு நடைமுறைகளை அல்லது வாய்ப்பினைக் கொண்ட நடவடிக்கையுடன் ஒப்பிடப்படுகிறது.

2. அரசிறை இலாப அணுகுமுறை: இவ்வணுகுமுறையானது குறிப்பிட்ட வரிச் சலுகை நீக்கப்பட்டிருக்குமாயின் அரசிறை எவ்வளவிற்கு அதிகரித்திருக்கும் என்பதனை அளவிடுகின்றது. இச்செலவின் துல்லியமான மதிப்பீடு அத்தகைய மாற்றத்துடன் இணைந்து காணப்படும் இரண்டாந்தர நடத்தை சார்ந்த தாக்கங்களின் மதிப்பீட்டினைத் தேவைப்படுத்தும்.

1. Tyson, J., Reforming Tax Expenditures in Italy: What, Why and How?, International Monetary Fund, WP/14/7, 2014

2. The Definition, Measurement and Evaluation of Tax Expenditures and Tax Reliefs, National Audit Office, The United Kingdom, 2014

3. வரிச் செலவின அறிக்கை 2012, அவுஸ்திரேலிய பொதுநலவாயம் 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செலவினைச் சமப்படுத்துகின்ற அணுகுமுறை: இவ்வணுகுமுறையானது வரிச் செலவினத்திற்குச் சமமான நன்மைகளை வழங்குவதற்கு எவ்வளவு செலவினம் தேவைப்படும் என்பதனை மதிப்பிடுகின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று முறைகளும் வரிச் செலவினத்தின் பெறுமதியின் குறிப்பிடத்தக்க வேறுபட்ட மதிப்பீடுகளைத் தருகின்றது. வரிச் செலவினத்தினை மதிப்பிடுவதற்கு தனித்துவமான முறையியலொன்றும் இல்லாமையினால், வேறுபட்ட நாடுகளில் வேறுபட்ட முறையியல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், முன்னமே தீர்மானிக்கப்பட்ட அரசிறை அணுகுமுறையானது பெருமளவிற்குப் பயன்படுத்தப்படுவதுடன் வரிச் செலவினத்தினை அளவிடுவதற்கான மிக நம்பமான முறையாகவும் காணப்படுகின்றது.

வரிச் செலவினத்தின் செலவுகளும் நன்மைகளும்

வரிச் செலவினமானது குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வரி செலுத்துவோரை ஊக்குவிப்பதனை நோக்கி முக்கியமாக நெறிப்படுத்தப்படுகிறது. இது முதலீடுகளைக் கவர்வதற்கும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கின்ற வேளையில் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கின்றது. பொதுவாக வேளாண்மை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் குறைந்த வீதத்தில் வரி விதிக்கப்படுகின்றன. மேலும், வரிச் செலவினங்கள் மானிட அபிவிருத்தியினை அல்லது சமூக நலன்புரியினை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும். இதன்படி, கல்வித் துறையின் மீது வரி விலக்கல்கள் அல்லது குறைந்த வரிகளை வழங்க முடியும்.

எனினும், மறுபுறத்தில், வரிச் செலவினத்தினை வழங்குவதில் அரசாங்கத்திற்குச் செலவுகள் ஏற்படுகின்றன. இதன்படி, வரிச் செலவினத்தின் உத்தேசிக்கப்பட்டுள்ள நோக்கத்தினை அடைவது பற்றிய கண்காணிப்பினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நன்கு நிறுவப்பட்ட செயலாற்ற வழிமுறைகளைக் கொண்டிருப்பது மிக முக்கியமானதாகும். வரிச் செலவினம் அதன் உத்தேசிக்கப்பட்டுள்ள நோக்கத்தினை அடைவதில் வெற்றியடைந்திருப்பினும் கூட, அத்தகைய நோக்கத்திற்கு அப்பால், இறைப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கு வழிவகுக்கக்கூடிய வரிகளைத் திரட்டுவதற்கான அரசாங்கத்தின் இயலாற்றலை வரிச் செலவினம் குறைத்துவிடுமாகையால் இதன் காத்திரமான தன்மை பற்றி பரந்தளவு கேள்விகள் எழுப்பப்படலாம். மேலும், சில வரிச் செலவினங்கள் பல்வேறு தரப்பினராலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக[4], வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்காக நடைமுறையிலுள்ள வரி ஊக்குவிப்புக்களை பல்தேசிய கம்பனிகள் தவறாகப் பயன்படுத்துவதன் காரணமாக இலாபம் இடம் மாற்றப்படுவதனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. எனவே, அத்தகைய வரி ஊக்குவிப்புக்களின் காரணமாக சமூகம் நன்மைகளைப் பெறுகின்றனவா அல்லது மோசமாகப் பாதிக்கப்படுகின்றன என்பதனை அறிந்து கொள்வதற்கு வரிச் செலவினத்தின் செலவுகளையும் நன்மைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமானதாகவுள்ளது.

இலங்கையில் வரிச் செலவினத்தினைக் குறைப்பதற்கான அண்மைய முக்கிய கொள்கை வழிமுறைகள்

இலங்கையில் அரசின் அரசிறையினை இரண்டு பகுதிகளாக வகைப்படுத்தலாம்; அவையாவன வரி அரசிறை (ஏறத்தாழ 90 சதவீதம்) மற்றும் வரியல்லா அரசிறை (ஏறத்தாழ 10 சதவீதம்). தலைக்குரிய வருமானம் உறுதியாக அதிகரித்து வந்த போதும் 1990 களிலிருந்து மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. இப்போக்கின் காரணமாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை 1990இன் 19.0 சதவீதத்திலிருந்து 2014இல் 10.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், இது 2015இல் 12.4 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் 2016இலும் அதே மட்டத்திலேயே காணப்பட்டது. இலங்கையில் வரி அரசிறையில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட வரிச் செலவினமே முக்கிய காரணமாகும். மேலும், வரிச் செலவினத்தின் தேறிய நன்மைகள் தொடர்பில் சரியான ஆய்வுகளும் காணப்படவில்லை. வரிச் செலவினம் தொடர்பான சரியான ஆய்வுகளும் காணப்படவில்லை. வரிச் செலவினம் தொடர்பான பகுப்பாய்வு நடுத்தர காலத்தில் நாட்டின் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் செயன்முறையினை வலுப்படுத்துவதற்குப் பங்களிக்கும்.

வரி அரசிறையில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை வெற்றி கொள்வதற்குத் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் பல்வேறுபட்ட வழிமுறைகளை

4. இலங்கையில் அதிகரித்துவரும் வரி அரசிறை: சவால்களும் கொள்கைகளும் ஆண்டறிக்கை 14, இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்திய போதும், எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைய முடியவில்லை. எனவே, வரி அரசிறையினை உயர்த்துவதற்குப் பொருத்தமான விதந்துரைப்புக்களைச் செய்வதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய ஆய்வொன்றினை மேற்கொள்வதற்காக 2009ஆம் ஆண்டு வரி விதிப்பு தொடர்பாக சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து கொள்கை மாற்றங்களுடன் சில விதந்துரைப்புக்கள் நடைமுறைக்கிடப்பட்டன.[5] இதற்கமைய, வரிச் செலவினங்களைக் குறைப்பதற்கு சிறப்புக் கவனங்கள் செலுத்தப்பட்ட வேளையில் 2011இல் அரச துறை ஊழியர்களுக்காக உழைக்கும் போதே செலுத்தும் வரி அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வரித் தளத்தினை விரிவாக்குவதற்காக 2013இல் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்தின் மீது பெறுமதிசேர் வரி விதிக்கப்பட்டது. அரசாங்கம் தற்பொழுது அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிச் செயன்முறையினைப் பின்பற்றி வருவதுடன் செலவினத்தினைக் குறைப்பதற்கு மேலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய, பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான விலக்கல்கள் 2016 நவெம்பரிலிருந்து நீக்கப்பட்டன. மேலும், புதிய உண்ணாட்டரசிறை மசோதா[6] 2017 யூலை 05ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், வருமான வரியின் கீழ் வழங்கப்பட்ட விலக்கல்களைக் குறைப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

வரிச் செலவினக் கூற்று

பெரும் எண்ணிக்கையான நாடுகளில், குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வரிச் செலவினக் கூற்றுக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. வரிச் செலவினக் கூற்றொன்று முதற்றடவையாக 2016 நவெம்பரில் 2017 வரவு செலவுத்திட்டத்தினைச் சமர்ப்பிக்கும் வேளையில் சிறந்த ஆளுகை, பொறுப்புக்கூறும் தன்மை வெளிப்படையான கோட்பாடுகள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.[7] அத்தகைய அறிக்கையானது வரவு செலவுத்திட்ட ஆவணங்களின் இன்றியமையாத பகுதியொன்றாக அமைந்து பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்தியதுடன் பன்னாட்டு நிதியிடல் முகவர்களுக்கு உத்தரவாதங்களையும் வழங்குகிறது. இவ்வறிக்கையின் கீழ் வரிச் செலவினங்கள் கம்பனி வரிகள், தனியாள் வரிகள் மற்றும் பெறுமதிசேர் வரிகள் ஆகிய மூன்று வரிகளுக்காக கணிக்கப்பட்டன. இதன்படி, இம்மூன்று வரிகளிலுமிருந்து கிடைக்கின்ற மொத்த வரிச் செலவினங்கள் ரூ.212.4 பில்லியன் (மொ.உ.உற்பத்தியில் 1.6 சதவீதம்) என மதிப்பிடப்பட்டிருப்பதுடன் இவை கம்பனி வரிகளிலிருந்தான ரூ.77.1 பில்லியனையும் தனியாள் வரிகளிலிருந்தான ரூ.10.0 பில்லியனையும் பெறுமதிசேர் வரியிலிருந்தான ரூ.135.3 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தன. எனினும், 2016இல் இம்மூன்று வரிகளிலுமிருந்தான மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் ஏறத்தாழ ரூ.450.0 பில்லியனாக (மொ.உ.உற்பத்தியில் 3.8 சதவீதம்) மட்டுமே காணப்பட்டன. எனவே, வரிச் செலவினங்கள் இல்லாதிருக்குமாயின் இம்மூன்று வரிகளிலுமிருந்தான அரசிறைச் சேகரிப்பு ஏறத்தாழ 50 சதவீதத்தினால் அதிகரித்திருக்கும். இது வரிச் சேகரிப்பினை மேம்படுத்துவதற்கு வரிச் செலவினத்தினை ஆய்வுசெய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது.

முன்னோக்கிப் பயணித்தல்

வரி நிருவாகத்தில் மேம்பாடுகளைச் செய்வதுடன் வரிக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதனூடாக 2020 அளவில் அரச அரசிறையை மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 16 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகைகள் வரி விலக்கல்களின் செலவினைக் கணிப்பதன் மூலம் வரிச் செலவினத்தின் தாக்கத்தினைக் கணிப்பதற்கும் அதேவேளை, வரிச் செலவினங்களை மிகத் தேவையான துறைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் சரியான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் இதுவே மிகப் பொருத்தமான நேரமாகும்.■

5. வரவு செலவுத்திட்ட உரை 2011, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
6. உண்ணாட்டரசிறை மசோதா, 2017
7. வரவு செலவுத்திட்ட உரை 2017, நிதி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்தநிலையான வளர்ச்சியை நோக்கிய அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி

21ஆவது வருடாந்த வரிக் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமியினால் வழங்கப்பட்ட விரிவுரை

2017 சனவரி 19

பின்னணி

இன்று நான் ஆற்றப்போகும் உரையின் தலைப்பு மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக, இலங்கையில் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவச் சவால்கள் நிறைந்து காணப்படும் தற்போதைய சூழலில் இது முக்கியமானதாகும். கொள்கைகளிலிருந்து விலகி, சந்தர்ப்பங்களையெல்லாம் தவறவிட்ட பல தசாப்தங்களுக்குப் பின்னர், இலங்கை இன்று மாற்றத்திற்கான மையமொன்றாகக் காணப்படுகிறது. அபிவிருத்தியில் பாய்ச்சலொன்றிற்கான உள்ளார்ந்த வளம் தற்பொழுது காணப்படுகின்றது. இதன் சிறப்பு வாய்ந்த அமைவிடம், உலகிலுள்ள மூலதன மிகையைக் கொண்ட பல நாடுகளுடனான பன்னாட்டுத் தொடர்புகள் என்பனவற்றைக் காத்திரமான முறையில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நாட்டின் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் அரசாங்கம் தற்பொழுது பரந்தளவிலான கொள்கைப் பொதியினை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றது. அரசாங்கம் வலுவான இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற செயன்முறையிலும் ஈடுபட்டு வருகின்றது. மத்திய வங்கியும் எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை வழங்கக்கூடிய விதத்தில் அதன் கொள்கைகளையும் செயன்முறைகளையும் அணிப்படுத்தி வருகின்றது. எனவே, இன்றைய பின்னணியில் இத்தலைப்பானது நாம் எல்லோருடனும் தொடர்பானதேயாகும்.

இறை மற்றும் நாணயக் கொள்கைககள்

நீங்கள் அறிந்தவாறு, இறைக் கொள்கையானது அரசாங்கத்தின் வரி விதிப்புச் செலவினம் மற்றும் பற்றாக்குறை நிதியிடல் தொழிற்பாடுகள் என்பன பற்றிக் குறிப்பிடுகின்றது. இறைக் கொள்கையானது பல்வேறு வழிகளின் மூலம் பேரண்டப் பொருளாதாரத்தின் மீது செல்வாக்கைச் செலுத்துகின்றது. இது கூட்டுக் கேள்வியின் மட்டத்தினையும் உள்ளமைப்பினையும் (வரி விதிப்பு, செலவினம் மற்றும் கடன்பாடுகளினூடாக) மாற்றுகின்றது. கூட்டு நிரம்பலை (வரி விதிப்பு மற்றும் உதவுதொகைகளூடாகவும் அதேபோன்று சேமிப்பு மற்றும் முதலீடுகள் மீதான தாக்கமூடாகவும்) மாற்றுவதுடன் தேசிய சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகளின் மீதும் (செலவினம் மற்றும் வரி விதிப்பூடாக) செல்வாக்குச் செலுத்துகின்றது. இறைக் கொள்கையானது அரச வரவு செலவுத்திட்டத்தினூடாகவும் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இலங்கை யப்பான் 148ஆவது பிரிவின் கீழ் நாட்டின அரச நிதியின் கட்டுப்பாடு மற்றும் பொறுப்பாண்மையின் கீழும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.[1]

நாணய விதிச் சட்டத்தின் கீழ், விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரத்தின் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றை உறுதிப்படுத்தும் பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.[2] இது நாணயக் கொள்கையின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் அதாவது நாணயத்தின் செலவு மற்றும் கிடைப்பனவின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான நடவடிக்கை அதேபோன்று நிதியியல் நிறுவனங்களின் முக்கிய வகைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை

1 பாராளுமன்றம் அரச நிதி தொடர்பில் முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் அதிகாரத்தின் கீழ் அல்லது தற்போதுள்ள ஏதேனும் சட்டங்களின் கீழ் அன்றி ஏதேனும் உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது ஏதேனும் மற்றைய அரச அதிகாரசபைகளினால் வரிகளையோ, சோலை வரிகளையோ அல்லது வேறு ஏதேனும் தீர்வுகளையோ விதிக்க முடியாது; இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் யாப்பு, பிரிவு 148.

2 இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் இலங்கையில் உற்பத்தியாக்க மூலவளங்களை அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்குடன் சாத்தியமானளவிற்கு அதன் கடமைகளை ஆற்றும் பொறுப்பும் பின்வரும் குறிக்கோள்களான (அ) பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு (ஆ) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அடையும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தலுடன் தொடர்பான நடவடிக்கைகள், முக்கிய நிதியியல் சந்தைகளில் உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையினை மேற்பார்வை செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

இவை ஒன்றுக்கொன்று துணை நிரப்பியாக இருக்கின்றவெனினும் ஆனால் மிகத் தெளிவான விதத்தில் தனித்தனியான வகிபாகத்தினைக் கொண்டனவாக காணப்படுகின்றன. ஆகவே, சட்ட ரீதியில், மத்திய வங்கியின் ஆளுநர் என்ற அடிப்படையில், உண்மையில் அரசாங்கத்தின் பொறுப்பாண்மையாக இருக்கும் அரசிறை, செலவினம், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, பற்றாக்குறைக்கு நிதியிடல், படுகடன், இறைத்திரட்சி மற்றும் அது போன்ற விடயங்களில் பேசமுடியும் என்பது ஆச்சரியமானதொன்றுதான். இப்பேச்சினிடையே நான் இவ்வாறு பேசுவதற்கான காரணங்களை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்குமென நான் நம்புகிறேன். இவற்றிடையே மிக முக்கியமான உள்ளகத் தொடர்புகள் காணப்படுகின்றமையானது சிறந்த இறை - நாணய இணைப்பிற்கிடையே மிக உயர்ந்த மதிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றன.

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் பணவீக்கமும்

சீமாட்டிகளே, கனவான்களே, பற்றாக்குறையானது குறைந்த பணவீக்கம் அத்துடன்/ அல்லது உயர்ந்த செலவினத்தின் மூலம் தோன்றுகின்றதென்பதும் நாணய மயப்படுத்துமிடத்து அது பணவீக்கத்தினை அதிகரிக்கின்றது என்பது பரந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது (புயிட்டர் 1985)[3]. நாணயக் கொள்கை இறைப் பற்றாக்குறைக்கு வசதியளித்திருக்குமாயின் நிலவுகின்ற இறை ஆதிக்கம் காரணமாக இத்தாக்கத்தின் அளவு குறிப்பிடத்தக்களவிற்குப் பெரிதாக இருக்கும். பாரிய அரச பற்றாக்குறை எப்பொழுதும் உயர்ந்த பணவீக்கத்துடன் இணைந்ததாகவா காணப்படுகின்றது என்ற வினாவிற்கு சார்ஜன்ட் மற்றும் வலஸ்ஸினால் (1981)[4] அவர்களின் "சில மகிழ்ச்சியற்ற நாணயவியல் எண்கணிதம்" என்ற நூலில் உறுதியாகப் பதிலளிக்கப்பட்டிருக்கிறது. எனினும், ஈஸ்டர்லி அன்ட் ஸ்மித்ட்-கெப்பல் (1993)[5] உள்ளிட்டவர்களின் பல ஆராய்ச்சி ஆய்வுகள் பணத்திற்கான உறுதியற்ற கேள்வி, செலாவணி வீத தேய்வு மற்றும் பரந்தளவு சுட்டெண்ணாக்கம் போன்ற பல்வேறுபட்ட காரணிகள் குறுங்காலப்பகுதியில் இறைப் பற்றாக்குறையின் நாணய மயமாக்கலுக்கும் பணவீக்கத்திற்குமிடையிலான இணைப்பினை மறைக்கின்றன. இத்தகைய கருத்துக்கள் காணப்படினும் கூட, உறுதியற்ற வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் அரசாங்கத்திற்கும் கொள்கை வகுப்போருக்கும் கடுமையான கரிசனைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி அவற்றுக்கு நிதியிடுவது தனியார் துறைக்கான நிதியின் கிடைப்பனவினை இல்லாமல் செய்வதன் மூலம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றது. உயர்வடைந்துவரும் வட்டி வீதங்கள் என்ற பொறிமுறையினூடாகவே இது இடம்பெறுகின்றது. மேலும், வெளிநாட்டு நிதியிடல் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகை இடர்நேர்வினைப் பெரிதுபடுத்தவும் செய்கிறது.

அரசாங்கத்தின் வகிபாகமும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடும்

நவீன அரச நிதியின் நிறுவனர் எனப் பரந்தளவிற்கு பெருமைப்படுத்தப்படும் றிச்சார்ட் ஏ. மஸ்கிறேவ்வின்படி "சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் வகிபாகம் மூன்று பிரிக்கத்தக்க பிரிவுகளாகக் காணப்படுகின்றது: ஒதுக்கம் (வினைத்திறன்), பங்கீடு (நியாயமானதன்மை) மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு. ஒதுக்கப் பிரிவு பொருளாதார முறைமையிலுள்ள வினைத்திறனற்ற மூலங்களைச் சரி செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற வேளையில் பங்கீட்டுப் பிரிவு ஆரம்பப் பங்கீடு நியாயமானது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. நாணய மற்றும் இறைக் கொள்கை மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுப் பிரச்சனைகள் உறுதிப்பாட்டுப் பிரிவின் கீழ் வருகின்றன".[6]

வளர்ச்சிக் குறிக்கோள்களை எய்துவதில் காணப்படும் வெற்றியானது பொருளாதாரம் தொழிற்படுகின்ற அத்திவாரத்தின் மீது பெருமளவிற்குத் தங்கியிருக்கின்றது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுடன் கூடிய வலுவான அத்திவாரமானது உத்வேகம் மிக்கக் கட்டமைப்பிற்கு மிக இன்றியமையாததாகும். இது, நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை எய்துவதற்கு வசதியளிக்கும். முக்கியமான பொருளாதார தொடர்புகள் சமநிலையிலும் உறுதியானதுமாக இருக்கின்ற வேளையில் பேரண்டப் பொருளாதாரம் உறுதியாக விளங்கும். உதாரணமாக உள்நாட்டுக் கேள்வி மற்றும் வெளியீடு, இறை வருமானம் மற்றும் செலவினம், சேமிப்பு மற்றும் முதலீடு[7] மற்றும் சென்மதி நிலுவை. எனினும், இத்தொடர்புகள் மிகையாகவோ அல்லது சரியான சமநிலையிலோ கூட இருக்க வேண்டும் என்ற அவசியமுமில்லை. இறை மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை போன்ற சமநிலையற்றதன்மை உறுதியானதொரு

3. Buiter, W.H., (1985), "A guide to public sector debt and deficits", Economic Policy (1): 13-80.
4. Sargent, T. & Wallace, N., (1981), "Some unpleasant monetaristic arithmetic", Monetarism in the United Kingdom: 15-41.
5. Easterly, W. & Schmidt-Hebbel, K. (1993) "Fiscal deficits and macroeconomic performance in developing countries", The World Bank Research Observer 8(2): 211-37.
6. Musgrave's vision of the public sector: The complex relationship between individual, society and state in public good theory; Karl E. Case; Journal of Economics and Finance (2008) 32, p348-355.
7 Macroeconomic Policy and Poverty Reduction; Brian Ames et ul., IMF (August 2001).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் அதாவது உறுதியற்றதன்மையினை உருவாக்காத பொதுப்படுகடன் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குச் சலனங்களை உருவாக்காத விதத்தில் நிதியிடப்படுமாயின் அவை பொருளாதார உறுதிப்பாட்டுடன் மிகச் சரியான முறையில் இணங்கிச் செல்லும்.

பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு உயர்ந்த மற்றும் நீடித்தநிலையான வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாகும். எனினும், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மாத்திரம் உயர்ந்த வீத பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்த முடியாது. இது அவசியமானதெனினும் போதுமானதொரு நிலைமையல்ல. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வளர்ச்சியின் உறுதியான உயர் வீதங்களும் முக்கியமான அமைப்பியல் கொள்கைகளில் தங்கியிருக்கின்றன. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை எய்துவதற்கு மத்திய வங்கி பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் மைய வகிபாகமொன்றினை, குறிப்பாக, உறுதிப்படுத்தல் வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கின்றது. இது மூன்று முக்கிய பேரண்டப் பொருளாதார சாதனங்களில் இரண்டிற்கு அதாவது வட்டி வீதங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் என்பனவற்றிற்குப் பொறுப்பாகவுள்ளன.

ஆற்றல்வாய்ந்த நாணய - இறை இணைப்பு

இது அடைவதற்கு இலகுவானதொரு இலக்கல்ல. நாணய - இறை இணைப்புச் சிக்கலானது. எனினும், ஒட்டுமொத்தப் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் இன்றியமையாததொரு கூறாகும். இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநரான மேர்வின் கிங் குறிப்பிடுகின்றவாறு "ஆம் உண்மையில் இவை இரண்டும் (நாணய மற்றும் இறைக் கொள்கை) மிக முக்கியமானவை. அவை இரண்டும் இணைந்து செயற்பட வேண்டியவை. எங்கள் நோக்கிலிருந்து பார்க்கையில், அவை இரண்டு விடயங்களைக் கொண்டிருக்கின்றன. முதலாவது இறைக் கொள்கையிலிருந்து அரசிறை மற்றும் செலவினம் என்பன வரை என்ன நடைபெறுகின்றது என்பது பற்றி எமக்கு மிக நெருக்கமாக அறிவிக்கப்படுகின்றது. அத்துடன் எமது கூட்டங்களில் திறைசேரி பிரதிநிதிகளினால் தேவையானவிடத்து சுருக்கமாக எமக்கு அறிவிக்கப்படுகிறது. இரண்டாவதாக, மிக முக்கியமாக, அரசாங்கம் அதன் சொந்த இறை விதிகளில் மிகக் கடுமையானதாக இருக்கிறது. அதாவது இறைக் கொள்கை அதன் நடுத்தர காலக் குறிக்கோளை உண்மையில் பூர்த்தி செய்கிறது. அந்நோக்கிலிருந்து பார்க்கையில் இறைக் கொள்கை நிலை என்றால் என்ன என்பது பற்றி எமக்குத் தெரிகிறது. மாறாக, இறைக் கொள்கையில் மாற்றங்கள் இருந்திருக்குமாயின் பொருளாதாரத்தில் கேள்வி அசைவு போன்றவற்றை மதிப்பிடும் பொழுது நாம் அவற்றைக் கவனத்தில் கொள்வோம் என்பதனை பிரபுக்கள் சபைத் தலைவர் அறிந்திருக்கின்றார். அத்துடன், அது ஒட்டுமொத்தத் தோற்றப்பாட்டினை நாம் அறிந்து கொள்வதற்கு வழிவகுத்த காரணிகளிலொன்றாக இருக்கலாம் என்பதுடன் தேவையேற்படின் வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களும் பதிலிறுத்தும்".[8]

இலங்கையிலும் கூட, நாணய அல்லது இறைக் கொள்கையினைத் தனியாக நடைமுறைக்கிட முடியாது என்பதனை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இவ்விரண்டும் இணைந்து காணப்படும் பேரண்டப் பொருளாதார இயக்கவாற்றலின் காரணமாக ஒன்றில் மற்றொன்று தாக்கத்தினைக் கொண்டிருக்கிறது. நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் அதேபோன்று உலகளாவிய பொருளாதார அபிவிருத்திகளும் இவ்விரண்டு கொள்கைகளின் நடத்தைகள் மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் அது நிதியிடப்படுகின்ற வழிமுறையும் மத்திய வங்கியின் வரம்பிற்குள் வருகின்ற வட்டி வீதங்கள், நாணய நிரம்பல், பணவீக்கம், வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் செலாவணி வீதம் போன்ற நாணயக் கொள்கையுடன் தொடர்பான மாறிகளுக்கு முக்கியமான தாக்கங்களைக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, நாட்டின் வெளிநாட்டு நிலுவையும் மத்திய வங்கியின் உள்நாட்டு நிதியியல் சொத்துக்களிலுள்ள மாறிகளினூடாக முக்கிமான தாக்கத்தினைக் கொண்டிருக்கிறது. இது ஒதுக்குப் பணத்தின் மட்டத்தினை நிர்ணயிக்கின்ற வேளையில் பணநிரம்பல், வட்டி வீதங்கள், பணவீக்கம் மற்றும் செலாவணி வீதம் அதேபோன்று பொருளாதாரத்தில் காணப்படும் ஒட்டுமொத்த கூட்டுக் கேள்வியின் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதன் விளைவாக, இது, வரி விதிப்பு, செலவினம் மற்றும் பற்றாக்குறைக்கு நிதியிடல் என்பனவற்றினூடாக இறைக் கொள்கையைப் பாதிக்கிறது.

நாணய மற்றும் இறைக் கொள்கைகள் திறந்த பொருளாதாரப் பேரண்ட பொருளாதாரக் கட்டமைப்பொன்றிலுள்ள சிக்கலான தொடர்புகளிடையே ஒன்றிலொன்று தொடர்புபட்டனவாகக் காணப்படுகின்றமையே இதன் பெறுபேறாகும். எனவே, உள்நாட்டு அதிர்வுகள் மற்றும் தளம்பலான உலகளாவிய பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் திறைசேரி மற்றும் மத்திய வங்கித் தொழிற்பாடுகளில், கட்டண நிலுவையை, ஆற்றல்வாய்ந்த நாணய - இறை இணைப்பினூடாகவே பேண வேண்டியிருந்தது. இலங்கை மத்திய வங்கியை ஆளுகை செய்கின்ற நாணய விதிச் சட்டம் நாட்டின் இறை அதிகாரியான நிதி அமைச்சுடன் ஆற்றல்வாய்ந்த உறவுமுறைகளைப் பேணுவதற்கான சட்ட ரீதியான சூழலை இயலுமைப்படுத்துகின்றது. முன்னோக்கிப் பார்க்கையில், கூட்டுக் கேள்வியின் ஆற்றல்வாய்ந்த முகாமைத்துவத்தினை எய்துவதற்கு எமது கொள்கைகளை மிகக் கவனமாக ஆராய வேண்டிய தேவை எமக்குக் காணப்படுகின்றது. இது உத்வேகம் மிக்க பேரண்டப் பொருளாதார அடிப்படைகளை அடைவதற்கு மிக இன்றியமையாதனவாகும்.

---

8. Monetary and Fiscal Policy: Present Success and Future Problems; House of Lords, Select Committee on Economic Affairs, 3rd Report of Session 2003-04, Volume 2: Evidence, p.86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்திரட்சிக்கான தேவை

இப்பின்னணியில், நான் இப்பொழுது இவ்விரிவுரையின் மையப் பொருளுக்கு வருகின்றேன். "உங்களெல்லோருக்கும் தெரிந்தவாறு, பாரிய இறை மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, அல்லது இரட்டைப் பற்றாக்குறை என்பன இலங்கையில் இரண்டு முக்கிய அமைப்பியல் பிரச்சனைகளாகும். இவை பல தசாப்தங்களாக பொருளாதாரத்தின் மையப் பலயீனங்களாகப் பெரிதுபடுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இக்காலப்பகுதி முழுவதிலும் நாடானது நீடித்துநிலைத்திருக்காது உறுதியற்ற வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினையே நாடு கொண்டிருந்தது. இது மிகையான உறுதியற்ற கேள்வியைத் தூண்டி, பணவீக்க அழுத்தங்களுக்கும் பொருளாதாரத்தின் உயர்ந்த பெயரளவு வட்டி வீதங்களுக்கும் வழிவகுத்தது. இது உள்நாட்டு நிரம்பல் வரையறைகளுக்கு மத்தியிலும் உயர்ந்த இறக்குமதிக்கான மனோபாவத்திற்கு வழிவகுத்தமையின் மூலம் சென்மதி நிலுவையின் மீதும் செலாவணி வீதத்தின் மீதும் அழுத்தத்தினை ஏற்படுத்தியது. நிச்சயமற்றதும் தளம்பலைக் கொண்டதுமான உலகளாவிய பொருளாதாரச் சூழலில், குறிப்பாக இன்றைய பின்னணியில், நாட்டின் இவ்விரட்டைப் பற்றாக்குறை சூழல் பாதிக்கப்படும் தன்மையினை அதிகரிக்கிறது. எனவே, இரட்டைப் பற்றாக்குறைகளை வெற்றி கொள்வதற்கேற்ற விதத்தில் உறுதியான தீர்வினைக் கொண்டிருப்பதற்குத் தெளிவானதும் இசைந்து செல்லக்கூடியதுமான கொள்கைகள் தேவைப்படுகின்றன. ஒரு புறத்தில், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கிலுள்ள பற்றாக்குறையுடன் தொடர்பான பலயீனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வர்த்தகத்துடன் தொடர்பான கொள்கைகள் அவசியமாகவுள்ளன. இவை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றைய முக்கிய துறையின் மீது இப்பொழுது கவனத்தினைச் செலுத்தப் போகிறேன். இவ்விளக்கவுரையில் இன்னொரு முக்கிய துறையில் கவனம் செலுத்தப் போகிறேன். இது, உறுதியான வளர்ச்சியை எய்துவதற்கு பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற சூழ்நிலையில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் இறைக் கொள்கையுடன் தொடர்பானதாகும்.

உயர்ந்த இறைப் பற்றாக்குறைகள் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் மொ.உ.உற்பத்திக்கான உயர்ந்த படுகடன் விகிதம் என்பன நடுத்தர கால படுகடன் உறுதிப்பாட்டுத் தன்மை மற்றும்[9] வளர்ச்சிக்கான வாய்ப்பினை ஆபத்திற்குள்ளாக்கி வருகின்றன என்பது உண்மையானதாகும். இலங்கையில், 2005 - 2015 வரையான காலப்பகுதியில் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் சராசரியாக 6.8 சதவீதமாகக் காணப்பட்டது. 2015இல் அரச படுகடன் மொ.உ.உற்பத்தியில் 76 சதவீதமாகக் காணப்பட்டது. இது எமது அயல் நாடுகளின் தரமிடலுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் உயர்வானதாகக் காணப்பட்டது. கடந்த காலத்தில் மொ.உ.உற்பத்திக்கான உயர்ந்த படுகடன் விகிதத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நன்மைகளெதனையும் வழங்கவில்லை. தற்பொழுது, காணப்படும் படுகடன் இருப்பில் வட்டிக் கொடுப்பனவுகள் எமது மொத்த அரசிறையில் ஏறத்தாழ 35 சதவீதங்களை ஈர்த்துக் கொண்டன. படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் மொத்த அரசிறையில் மேலும் 56 சதவீதத்தினை ஈர்த்துக் கொண்டன. எனவே, 2016இல் 90 சதவீதமான அரசிறை மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளினால் ஈர்த்துக் கொள்ளப்பட்டன. தற்பொழுது இப்பிரச்சனையானது, இலங்கையின் தலைக்குரிய வருமானம் அதிகரித்தமையின் விளைவாக இலங்கை தாழ்ந்த நடுத்தர வருமானப் பொருளாதாரமாக மாறியதன் மூலம் மேலும் சிக்கலானதாக மாறியிருக்கிறது. இது கொடையாளர்களிடமிருந்தான சலுகை ரீதியிலான வரவு செலவுத்திட்ட நிதியிடலைப் படிப்படியாக வீழ்ச்சியடையச் செய்த வேளையில் சலுகையல்லாக் கடன்கள் மற்றும் வர்த்தகக் கடன்பாடுகளுக்கான அதிகரித்த வெளிப்படுத்துகை காணப்படுகின்றது.

எனவே, அரச படுகடனைக் குறைப்பது மிக இன்றியமையாததாகும். உயர்ந்த அரச படுகடனானது வட்டி வீதங்களை அதிகரித்து, தனியார் முதலீடுகளை ஊக்கம் குன்றச் செய்து இறை நெகிழ்ச்சித்தன்மையினையும் தடை செய்யும் போக்கினைக் கொண்டிருப்பதனால் இது பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க செலவினத்தினை ஏற்படுத்துகின்றது. பொதுப்படுகடனானது குறிப்பிட்ட மட்டங்களுக்கு அப்பால் பொருளாதார நடவடிக்கைகளின் மீது எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என்பதனை அனுபவ ரீதியான சான்றுகள் எடுத்துக்காட்டின.[10] பல தசாப்தங்களாக பாரம்பரியமாகக் காணப்படும் நீடித்துநிலைத்திருக்காத இறைப் பற்றாக்குறையின் தன்மை மற்றும் இணைந்த உயர்மட்ட அரச படுகடன் என்பன நாட்டில் நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கையினைச் சிக்கலாக்கியிருக்கின்றன. "உயர்ந்த படுகடன் - தாழ்ந்த வளர்ச்சிப் பொறி" என அழைக்கப்படக்கூடிய தன்மையினை வெற்றி கொள்வதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார சீர்திருத்தங்களினால் ஆதரவளிக்கப்பட்ட வலுவானதும் நீண்ட கால இருக்கக்கூடியதுமான இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டத்தினைப் பின்பற்றுவது இலங்கைக்கு அவசியமானதாகும்.

9. "Debt 'sustainability' is often defined as the ability of a country to meet its debt obligations without requiring debt relief or accumulating arrears", Development Finance International.

http://www.development-finance.org/en/topics-of-work/debt-strategy-information/debt-sustainability.html

10. "Threshold effects of sovereign debt: Evidence from the Caribbean," Greenidge, Kelvin, Roland Craigwell, Chrystol Thomas, and Lisa Drakes (2012), IMF Working Paper No. 12/157 (Washington: IMF).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்திரட்சியானது "அரச பற்றாக்குறைகளும் படுகடனும் ஒன்றுசேர்வதனைக் குறைப்பதனை இலக்காகக் கொண்ட மிக உறுதியான கொள்கை"[11] என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. இறைத்திரட்சி என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணம் செய்வது நியாயமான ரீதியில் சுலபமாக இருக்கின்ற வேளையில், இறைச்சீராக்கத்தினைச் சரியான முறையில் வடிவமைப்பதும் காத்திரமான விதத்தில் நடைமுறைக்கிடுவதும் சவால்மிக்கதாகக் காணப்படுகின்றது. வழமையாக இடர்ப்பாடான விதத்தில் காணப்படும் அரசியல் பிரிவுகளைக் குறுகிய காலத்தில் கையாள்வது சுலபமானதல்ல. எனினும், இறை உறுதிப்பாட்டுத்தன்மை வளர்ச்சி, தொழில்நிலை மற்றும் வருமானம் என்பனவற்றின் உறுதியான வளர்ச்சிக்கு முக்கியமான முற்தேவைப்பாடாக விளங்குகின்றது. இறைத்திரட்சி இல்லாத சந்தர்ப்பத்தில், பொருளாதாரமானது பொறியில் சிக்கி தளம்பல் வட்டி மற்றும் செலாவணி வீதங்களுடன் மீண்டும் மீண்டும் சூழலும் நிலையினை அடையும். பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளில் காணப்படும் இசைந்து செல்லும் தன்மை குறைவாகக் காணப்படுவதும் ஊகத்தன்மையும் வியாபாரச் சூழலைக் குறைத்துவிடும்.

இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டத்தினைப் பல்வேறு வழிகளில் நடைமுறைப்படுத்த முடியும். அதாவது (i) செலவினத்தினைக் குறைப்பதன் மூலமும் (ii) அரசிறையினை அதிகரிப்பதன் மூலமும் (iii) இவ்விரண்டு கொள்கைகளையும் இணைந்து பின்பற்றுவதன் மூலமும் இதனை மேற்கொள்ள முடியும். இறைத்திரட்சியின் தாக்கமும் அதன் வெற்றியும் வரித் தாக்கங்களின் மீதும் (அரசிறை) அரச வரவு செலவுத்திட்டத்திலுள்ள செலவினத்தினை அடிப்படையாகக் கொண்ட சீராக்கங்களின் மீதும் பெருமளவிற்கு தங்கியிருக்கிறது. மறுசொற்களில் கூறுவதாயின், மேம்பட்ட வரி அரசிறைகள் கிடைக்கப்பெற்றமை மற்றும் செலவினம், மூலவளங்களின் கிடைப்பனவுடன் சிறந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளமை என்பன இறைத்திரட்சியின் கூறுகளாகும். எனினும், அரசாங்கத்தின் கொள்கை குறிக்கோள்களின் மீதும் நாட்டின் பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலைகளின் மீதும் கவனம் செலுத்துவதன் மூலம் இவற்றைக் கவனமாகத் தெரிவுசெய்தல் வேண்டும்.

இலங்கைக்கு அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிச் செயன்முறை ஏன் தேவை?

வெற்றிகரமான இறைத்திரட்சியைப் பின்பற்றுவதற்கு மிகப் பொருத்தமான வழி எது என்பது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. பாரிய சீராக்கங்கள் தேவைப்படும் நாடுகளுக்குச் செலவிடல் வெட்டுக்களையும் அரசிறை அதிகரிப்புக்களையும் சமநிலைப்படுத்துகின்ற இணைப்புக்களுக்கு இறைத்திரட்சி அடிக்கடித் தேவைப்படுவதனை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன[12]. இலங்கையில், அரசாங்கம் அரசிறையினைத் திரட்டுவது தொடர்பான இறைத்திரட்சிப் பாதையினைப் பின்பற்றுவதற்குத் தெரிவு செய்திருக்கிறது. இதன் மீது கவனத்தினைச் செலுத்தும் விதத்தில், கடந்த ஒரு சில தசாப்தங்களாக இலங்கையில் இறைச் செயலாற்றம் தொடர்பில் சில வரலாற்று ரீதியான நோக்கத்தின் மீது உங்கள் கவனத்தினை ஈர்க்க விரும்புகிறேன்.

சுதந்திரமடைந்த காலப்பகுதியில், இலங்கை மிக வலுவான அரசிறைத் தளத்தினைக் கொண்டிருந்தது. இது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மீதான வரி விதிப்பின் மூலம் உயர்ந்த அரசிறையினை உருவாக்கிக் கொண்டது. மரப்பயிர்கள் துறை (ஏற்றுமதிகள்) மீதான வரிகள் அரசிறையின் முக்கிய மூலங்களாக இருந்ததுடன் மேம்பட்ட சமூக அபிவிருத்திக்கும் பங்களித்தது. 1977இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயப்படுத்தல் வழிமுறைகளைத் தொடர்ந்து பொருளாதாரம் படிப்படியாக ஆழமடைந்தமையுடன் சேர்ந்து, இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்த வேளையில், இத்துறைகளுக்கு ஆதரவளிப்பதற்காக தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் ஏற்றுமதி வரிகளைக் கட்டம் கட்டமாக நீக்கிவிட்டன. பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி; தேசிய மயமாக்கலைத் தொடர்ந்து வினைத்திறன் இழக்கப்பட்டமை; மற்றும் உயர்வடைந்து செல்லும் கூலி என்பனவற்றை இதற்கான விளக்க காரணிகளாகக் குறிப்பிடலாம். அதேபோன்று தேசிய பாதுகாப்பு, சுகாதாரம், சூழல், தொற்றுநோய்த் தடுப்பு மற்றும் தர உத்தரவாதப் பரிசீலனைகள் போன்ற குறித்துரைக்கப்பட்ட துறைகள் தவிர்ந்த மற்றையவற்றிற்கான இறக்குமதி வரிகள் மற்றும் வரியல்லா தீர்வைத் தடைகள் குறைக்கப்பட்டன. இச்சீர்திருத்தங்களும் பொருளாதாரத்தினை ஆரம்ப பண்ட வடிவிலான ஏற்றுமதி அமைப்பிலிருந்து பெருமளவிற்கு பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி அமைப்பிற்கு நகர்த்தியமையை இங்கு குறிப்பிடுவது முக்கியமானதாகும். எனினும், ஏற்றுமதி வரிகளிலிருந்தான அரசிறை 1978இன் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 5 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 0.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வபிவிருத்திகளின் பின்னணியில், வரி வீதங்களுக்கு பல மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வரித் தளங்களும் வரி வகைகளும் வர்த்தகத்தின் வருமானத்திலும் அளவுகளிலும் ஏற்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்படவில்லை. இதன் விளைவாக, மொ.உ.உற்பத்திக்கான இலங்கையின் அரசிறை விகிதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. உறுதியான இறைப் பெறுபேறுகளை எய்துவதற்கும் அதேவேளையில் மிகத்

11."Fiscal consolidation: Targets, plans and measures": OECD (2011), OECD Journal on Budgeting, Vol. 11/2, http://dx.doi.org/10.1787/budget-11-5kg869h4w5f6

12. Baldacci, Emanuele, Sanjeev Gupta, and Carlos Mulas-Granados (2010), "Getting debt under control" Finance and Development, Vol. 47, No. 4, December (Washington: IMF).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான சமூகச் செலவினங்களையும் அரச முதலீடுகளையும் பூர்த்தி செய்வதற்கும் இது பாரிய சவாலாக மாறியது. உண்மையில், 1978இல் மொ.உ.உற்பத்திக்கான நாட்டின் வரி அரசிறை விகிதம் 24.2 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. அதன் பின்னர் இது 2000ஆம் ஆண்டில் 14.5 சதவீதத்திற்கும் 2014இல் 10.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2015இல் வரி அரசிறை வீழ்ச்சியடைந்து செல்லும் அதன் போக்கிலிருந்து தலைகீழான மாற்றத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் மொ.உ.உற்பத்தியின் 12.1 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. இது 2016இல் 13 சதவீதத்திற்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டது.

மொ.உ.உற்பத்திக்கான அரசிறை விகிதத்தின் இம்மோசமான செயலாற்றத்திற்கு மொ.உ.உற்பத்தியின் மாற்றங்களுக்கு வரி அரசிறை வளர்ச்சியின் பதிலிறுப்பாகக் காணப்பட்ட அரசிறைச் செழிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய தூண்டுதலாக அமைந்தது[13]. இது பல்வேறு வரி விலக்கல்களுக்கும் வரித் தவிர்த்தல்களுக்கும் வரி நிருவாகத்தின் பலயீனங்களுக்கும் காரணமாகியது. 2010 - 2015 காலப்பகுதியில் வரி அரசிறைச் செழிப்பு 1980 - 89 காலப்பகுதியின் 1.14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டமையானது வரித் தளத்தின் கடுமையான தேய்வினைப் பிரதிபலித்தது. இது நாட்டின் அதிகரித்த தேசிய வருமானத்திற்கு பதிலிறுத்தவில்லை. அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் அனுபவம் வேறுபட்டதாகும். ஒட்டுமொத்த மொ.உ.உற்பத்தியும் அதேபோன்று தலைக்குரிய வருமானமும் அதிகரித்திருக்கின்ற வேளையில், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரச அரசிறையும் வரி அரசிறையும் வீழ்ச்சியடைந்து செல்லும் பயணத்தினைத் தொடர்ந்தன. இப்போக்கினை மதிப்பிடும் பொழுது நீண்ட கால மோதல்கள் காணப்பட்ட காலத்தில் பொருளாதாரத்துடன் இணைந்து காணப்பட்ட உயர்ந்தளவு இடர்நேர்வின் போது தனியார்துறை முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு வரிச் சலுகைகளும் விலக்கல்களும் அவசியமாக இருந்தமையினை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

பாரம்பரிய ஏற்றுமதிகளின் இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் தோன்றிய வரி அரசிறை இழப்புக்களை, கடந்த மூன்று தசாப்தங்களாக தோற்றம் பெற்றுவந்த சுற்றுலா மற்றும் ஆடை போன்ற துறைகளிலிருந்தான புதிய வரி அரசிறையினால் இழப்பீடு செய்து கொள்ளமுடியவில்லை. மோதல்கள் முடிவடைந்தமையுடன் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்ட பரந்தளவிலான வரிச் சலுகைகளுக்கான அடிப்படைக் காரணம் வலுவிழந்து போயிற்று. ஆகவே, அரசாங்கத்தின் அண்மைய வரி ஊக்குவிப்பு ஒழுங்குமுறைப்படுத்தல் மிகச் சிறந்ததொரு நடவடிக்கையாகும்.

13. Revenue buoyancy explains this relationship between the changes in government's tax revenue growth and the changes in GDP. When a tax is buoyant, its revenue increases without increasing the tax rate.

இலங்கையில் அரசிறைச் சேகரிப்பின் தற்போதைய நிலை பற்றிய சிறந்த தோற்றப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, இதனை அயல்நாடுகளுடனும் அதேபோன்று அபிவிருத்தியடைந்த நாடுகளுடனும் ஒப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். பிரான்சு (47.9 சதவீதம்), டென்மார்க் (47.6 சதவீதம்), பெல்ஜியம் (47.5 சதவீதம்) போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளின் மொ.உ.உற்பத்திக்கான வரி விகிதம் ஏறத்தாழ 40 - 50 சதவீதமாகக் காணப்படுகின்றன. அந்நாடுகளின் உயர்ந்த வரி அரசிறைகள் சிறந்த அபிவிருத்திகளைக் கொண்ட நலன்புரி அரசிற்கு நிதியிடப் பயன்படுத்தப்படுகின்றன. 2015இல் அயர்லாந்து (24.4 சதவீதம்), ரோமானியா (28.0 சதவீதம்), பல்கேரியா (29.0 சதவீதம்) போன்ற நாடுகளின் வரி விகிதம் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 20 - 30 சதவீதமாகக் காணப்பட்டன[14]. ஆசிய நாடுகளிடையே 2014இல் தாய்லாந்து (16.0 சதவீதம்), மலேசியா (14.8 சதவீதம்), பிலிப்பைன்ஸ் (13.6 சதவீதம்), சிங்கப்பூர் (13.9 சதவீதம்) ஆகியனவற்றின் வரி விகிதம் மொ.உ.உற்பத்தியின் 20 சதவீதத்திற்குக் குறைவாகக் காணப்பட்டன[15]. பொதுவாகக் குறைந்த வருமானத்தினைக் கொண்ட நாடுகளின் மொ.உ.உற்பத்திக்கான வரி விகிதம் 10 - 15 சதவீதத்திற்கிடையில் காணப்பட்ட வேளையில் தாழ்ந்த நடுத்தர வருமான நாடுகளின் அவ்விகிதம் 15 - 20 சதவீதத்திற்கிடையில் காணப்பட்டவிடத்து பொருளாதார ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் பொருளாதாரங்களில் அவ்விகிதம் உயர்ந்த வீச்சான 30 - 40 சதவீதமாகக் காணப்பட்டது[16]. இதன்படி, தாழ்ந்த நடுத்தர வருமான நாடு என்ற ரீதியில் இலங்கை உலகின் மிகக் குறைந்த மொ.உ.உற்பத்திக்கான மிகக் குறைந்த வரி விகிதத்தைக் கொண்ட நாடுகளிலொன்றாக விளங்குகிறது. இவ்வரி விகிதம் 2014இல் 10.1 சதவீதமாகக் காணப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டவாறு இது 2015இல் 12.1 சதவீதத்திற்கு மீட்சியடைந்திருப்பதுடன் 2016இல் 13 சதவீதத்திற்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வரி அரசிறையில் காணப்படும் இன்னொரு வெளிப்படையான கரிசனைக்குரிய விடயம் யாதெனில் நேரடி வரிகளுக்கான மறைமுக வரிகளின் விகிதாசாரமற்ற பங்கின் தன்மையாகும். நேரடி வரிகளில் வருமான வரி முக்கிய கூறாகக் காணப்படுவதுடன் 2015இன் வரி அரசிறையில் ஏறத்தாழ 19 சதவீதத்தினை மாத்திரமே உள்ளடக்கியிருந்த வேளையில் மறைமுக வரிகளில், முக்கியமாக பெறுமதிசேர் வரி போன்ற நுகர்வு வரிகள் மொத்த வரி அரசிறையில் ஏறத்தாழ 81 சதவீதத்தின உள்ளடக்கியிருந்தன. மறைமுக வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் இயல்பாகவே

14. http://ec.europa.eu/eurostat/statistics-explained/index.php/Tax_revenue_statistics#Tax_revenue-to-GDP_ratio:_France.2C_Denmark_and_Belgium_show_the_highest_ratios

15. http://search.worldbank.org/all?qterm=tax%20to%20gdp

16. Mascagni G., Moore M., Mcclusleey R., (2014) "Tax Revenue Mobilisation in Developing Countries: Issues and Challenges

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்குமுகத் தன்மையினைக் கொண்டனவாக இருப்பதன் காரணமாக இது மோசமான விகிதாசாரமற்ற தன்மையொன்றினை ஏற்படுத்துகின்றது. மற்றைய பல தோற்றம் பெற்று வருகின்ற/அயல் நாடுகளின் நேரடி வரிகளின் பங்கு இலங்கையைவிட உயர்வானதாகக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, மலேசியா, இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் கென்யா என்பன 40 சதவீதத்திற்கும் மேலான நேரடி வரிப் பங்கினை (உலக வங்கி)[17] கொண்டிருக்கின்றன. அதேவேளை, 2010 - 2015 காலப்பகுதியில் அரசாங்கத்தின் செலவினம் சராசரியாக மொ.உ.உற்பத்தியில் 18.8 சதவீதமாகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் அரசாங்கத்தின் நடைமுறைச் செலவினம் ஏறத்தாழ 13.7 சதவீதமாகக் காணப்பட்டது. வட்டிக் கொடுப்பனவுகள், வரவு செலவுத்திட்டத்தின் "கட்டாயமல்லாத" செலவிடல் கூறு மற்றும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் என்பன நடைமுறைச் செலவினப் பங்குகளில் தொடர்ந்தும் நிலையாக விளங்க மீண்டெழும் செலவினத்தின் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் வகைகூறின. 2010 - 2015 காலப்பகுதியில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மொ.உ.உற்பத்தியில் முறையே சராசரியாக 4.4 சதவீதமாகவும் 4.7 சதவீதமாகவும் காணப்பட்டன. மேலும், வறுமை ஒழிப்பின் முக்கிய கூறாக விளங்கும் வீட்டலகுகளுக்கான மாற்றல்களை உள்ளடக்கிய வரவு செலவுத்திட்டத்தின் மாற்றல் கொடுப்பனவுகளும் நலன்புரிச் செலவுகளும் இக்காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் சராசரியாக ஏறத்தாழ 3.0 சதவீதமாகக் காணப்பட்டன.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட அபிவிருத்திகளைக் கவனத்திற் கொள்கையில், ஏனைய அழுத்தம் தரும் கரிசனைகளுக்கு வசதியளிப்பதற்காக வரவு செலவுத்திட்டத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள இறை அளவு தொடர்ந்தும் போதுமானதற்றதாகவே காணப்படுகின்றது. இதன் கருத்து யாதெனில், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கான செலவிடல் மீது அழுத்தங்கள் காணப்படுகின்றன என்பதேயாகும். இறை அளவு என்பது அரசாங்கத்தின் நிதியியல் நிலைமையின் உறுதித்தன்மைக்கு அல்லது பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்கு ஆபத்தினை ஏற்படுத்தாது விரும்பத்தக்க நோக்கத்திற்காக மூலவளங்களை வழங்குவதற்கு அரசாங்கத்தினை அனுமதிக்கின்ற "வரவு செலவுத்திட்ட வசதியொன்று" (கெல்லர் 2005") ஆகும்[18]. இலங்கையின் இறை அளவில் காணப்படும் பற்றாக்குறை, வெற்றிகரமான கதைகளைக் கொண்ட கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் நிலைக்கு மாறானதாகும். இலங்கையின் செலவின மாதிரியானது, சராசரியாகக் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள், வரவு செலவுத்திட்டத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்த நிதியில் 16 சதவீதத்தினை மாத்திரம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இது, 2010இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியில் முறையே 1.7 சதவீதத்திற்கும் 1.3 சதவீதத்திற்கும் வகைகூறின. 2015 மற்றும் 2016 காலப்பகுதியில் முன்னேற்றங்கள் காணப்பட்டன. கடந்த ஆண்டில் சுகாதாரம் மற்றும் கல்விச் செலவினம் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 3.6 சதவீதமாகக் காணப்பட்டது. இச்சூழ்நிலையானது மிகப் பொருத்தமான துறைகளுக்குக் கூடுதலான நிதியினை வழிப்படுத்துவதற்கான தேவையினையும் அதேவேளை வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களைச் சரியாக இலக்கிட வேண்டிய தேவையினையும் எடுத்துக்காட்டுகின்றது. மீண்டெழும் செலவினத்தினை மேலும் சிக்கனப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்ற வேளையில், பொருளாதார நடவடிக்கையில் தனியார் துறையின் ஈடுபாட்டினைத் தூண்டுவதற்காக அரச முதலீட்டில் போதுமான மட்டத்தினைப் பேணுவதிலும் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

மொத்தச் செலவினத்தினை மொ.உ.உற்பத்தியின் 19-20 சதவீதத்தில் பேணுவது அபிவிருத்தியில் இலங்கையின் மட்டத்திலுள்ள நாடொன்றிற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும். பிரச்சனையானது அரசிறைச் சேகரிப்புடன் தொடர்புடையதாக இருக்கிறது. செலவினப் பக்கத்திலுள்ள சவால்கள் ஒட்டுமொத்த மட்டத்திலும் பார்க்க அரச செலவினத்தின் உள்ளமைப்பு மற்றும் தரம் என்பனவற்றுடன் தொடர்பானதாகவுள்ளது.

அரசிறை உருவாக்கத்தில் காணப்பட்ட கடுமையான பின்னடைவு மற்றும் கடந்த ஆண்டுகளில் அதிகரித்த மீண்டெழும் செலவினம் என்பன தேசிய வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினைத் தோற்றுவித்திருக்கிறது. 1987 இலிருந்து இது மொ.உ.உற்பத்தியின் சராசரியாக -2.3 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் கருத்து யாதெனில், அரசாங்கம் குறைச் சேமிப்பாளராக இருக்கின்றதென்பதேயாகும். இதன் மூலம் நாட்டின் சேமிப்பு - முதலீட்டுச் செயலாற்றமும் பாதிக்கப்படுகின்றது. அதேவேளை, கடந்த பல தசாப்தங்களாக ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை வெளிநாட்டுத் துறை உள்ளிட்ட பொருளாதாரத்தின் மற்றைய துறைகளின் மீது வலுவான கசியும் தாக்கங்களை ஏற்படுத்தி, தாழ்ந்த அரசிறைச் சேகரிப்புக்களுக்கு மூல காரணமாக விளங்குகின்றது. எனவே, அரசிறைப் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதனூடாகப் பற்றாக்குறை முகாமைத்துவத்திற்கு முன்னுரிமையினை வழங்க வேண்டியிருக்கும். இது பற்றாக்குறையினைக் குறைக்கும் முயற்சியினைப் பாதிக்காமல் நடுத்தர காலத்தில் அரச முதலீடுகளை மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 5-6 சதவீதத்தில் பேணுவதனை இயலச் செய்யும். கடந்த காலத்தில் மூலதனச் செலவினமானது எதிர்கால வளர்ச்சி மற்றும் தொழில்நிலை உருவாக்கம் என்பனவற்றின் மீதான எதிர்மறையான தாக்குதலை ஏற்படுத்தி இறைத்திரட்சி மீதான மிகப்பெரும் தாக்குதலை ஏற்படுத்தியிருக்கிறது.

17. http://wdi.worldbank.org/table/4.14

18. Heller, P. (2005) 'Understanding Fiscal Space', Policy Discussion Paper PDP/05/4, Fiscal Affairs Department, IMF, Washington DC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவினைக் குறைப்பது இறைத்திரட்சியைத் தூண்டுவதன் மீதான கவனம் ஏற்கனவே உயர்வடைந்திருக்கும் வரி விதிப்பு மற்றும் செலவிடல் சூழ்நிலையில் பொதுவாகப் பொருத்தமானதொன்றாகவே இருக்கும். செலவினம் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு மட்டத்திலும் அதனைக் குறைப்பதற்கான வாய்ப்புக்கள் ஒப்பீட்டு ரீதியில் மிகச் சிறிதாகவும் காணப்படுவதனை கவனத்திற் கொள்கையில், இலங்கை போன்ற நாட்டில் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிப் பாதைக்கே முன்னுரிமையளித்தல் வேண்டும். எனவே, அரசாங்கத்தின் செலவினத்தினை மேலும் சிக்கனப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்ற வேளையில், பொருத்தமான வரிச் சீர்திருத்தங்களினூடாக அரசிறைச் சேகரிப்புக்களை உயர்த்துவதன் மீது கூடுதல் கவனத்தினைச் செலுத்துவது நாட்டிற்கு அவசியமாகும். நோபல் பரிசினை வென்றவரான ஜோசப் ஸ்ரீலிட்ஷ் தமது அண்மைய கட்டுரையொன்றில் "குறிப்பாக வரிச் சீர்திருத்தங்கள், வரவு செலவுத்திட்ட நெருக்கடிகள் மற்றும் பொருளாதாரத்தின் அடிப்படைகளை வலுப்படுத்துகின்ற அரச முதலீடுகளை மேற்கொள்ளுதல் ஆகிய இரண்டிற்கும் தீர்வு காணும் பாதையினை வழங்குகின்றது"[19] எனக் குறிப்பிடுகின்றார். இலங்கையின் பின்னணிக்கு இது மிகப் பொருத்தமானதாகும்.

அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சியின் நன்மைகள்

சீமாட்டிகளே, கனவான்களே, அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிகளை நோக்கிய இறைச் சீர்திருத்தங்கள் இறையின் அளவினை இயன்றவரைக்கு விரிவுபடுத்துவதுடன் நடுத்தர காலத்தில் வளர்ச்சித் தூண்டுதலின் மீது கூடியளவு செலவிடலையும் அனுமதிக்கும். இது உட்கட்டமைப்புச் செலவிடலைப் பேணுவதற்கான அரசாங்கத்தின் இயலாற்றலைப் பாதுகாக்கின்ற வேளையில் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் போன்ற முக்கிய சமூகச் செலவிடல் வகைகளுக்கான மோசமான இறைச் செலவினையும் தொடர்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு, அத்தகையதொரு உபாயமானது வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறையினைக் குறைத்தல் மற்றும் பொதுப்படுகடன் விகிதத்தினை உறுதியான மட்டத்தில் பேணுதல் ஆகிய குறிக்கோள்களுடன் நன்கு இணைக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கியின் கௌரவம்மிக்க முன்னாள் தலைவரான பென் பேர்னாக், நீண்ட காலத்தில் நிலைத்திருக்கக்கூடிய தன்மையினை ஏற்படுத்தக்கூடிய பெடரல் வரவு செலவுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நம்பகமான திட்டம் நீண்ட காலத்தில் வட்டி வீதங்களைக் குறைப்பதற்கும் வீட்டலகுகள் மற்றும் வியாபாரத்தின் நம்பிக்கையினை உத்வேகப்படுத்துவதற்கும் உதவுவதன் மூலம் இன்று பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்றது[20] எனக் குறிப்பிடுகின்றார். இது இலங்கையைப் பொறுத்தவரையிலும் கூட மிகவும் ஏற்புடைத்தான பின்னணியே. நீண்ட கால அடிப்படையில தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி அத்தியாவசியமானதாக இருப்பதுடன் இது பொருளாதாரத்தில் உற்பத்தியாக்க முதலீடுகள் இடம்பெறுவதற்கான தூண்டுதலையளிக்கும் சூழ்நிலையினையும் உருவாக்கும். வரலாற்று ரீதியாக, பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு அரசாங்கம் உள்நாட்டு நிதியிடல் மூலங்களில், குறிப்பாக வங்கித்தொழில் முறைமையிலிருந்தான கடன்பாடுகளில் பெருமளவிற்குத் தங்கியிருப்பது முக்கிய கரிசனைக்குரியதொரு விடயமாகக் காணப்படுகின்றது. பொதுவாக. வங்கித்தொழில் துறையிலிருந்தான உயர்ந்த அரச கடன்பாடுகள் முறைமையிலுள்ள முதலீடு செய்யத்தக்க மூலவளங்களில் பெரும்பங்கினை நுகர்ந்து கொள்வது பொருளாதாரத்தில் வட்டி வீதங்களை மேல் நோக்கித் தள்ளிவிடுகின்றது. இது பொருளாதாரத்தில் வளர்ச்சிக்கும் தொழில் வாய்ப்புக்களுக்கும் ஆதரவாகவுள்ள தனியார் துறையின் முதலீடுகளை இல்லாமல் செய்துவிடுகின்றது. ஆகவே, அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி வங்கிக் கடன்பாடுகள் குறைவடைவதற்கு ஆதரவளிப்பதுடன் வலுவான நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கும் தொழில் உருவாக்கத்திற்குமான தனியார் துறை முதலீடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்பினை விரிவுபடுத்துகின்றது.

அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சியானது உறுதியற்ற வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினால் உருவாக்கப்படுகின்ற மிகையான கேள்வியிலிருந்தும் தோன்றுகின்ற வெளிநாட்டிலிருந்தான பாதிக்கப்படும் தன்மையினையும் செலாவணி வீதத்தில் காணப்படும் குழப்பகரமான தளம்பல்களையும் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகள் மீதான அழுத்தங்களையும் குறைக்கும்.

இறைத்திரட்சி, மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுவரும் சீர்திருத்தங்களுக்கும் முக்கியமானதாகும். மற்றைய பல பொருளாதாரங்களில் உள்ளதைப் போன்று, மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடலை நோக்கி நகர்கின்ற செயன்முறையினை மேற்கொண்டு வருகின்றது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினையும் அரச படுகடனையும் குறைப்பதனை இலக்காகக் கொண்ட அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சியானது நாணயக்

---

19. Stiglitz, Joseph E. (2014), "Reforming Taxation to Promote Growth and Equity"; White Paper, (28 May) http://rooseveltinstitute.org/wp-content/uploads/2014/05/Stiglitz_Reforming_Taxation_White_Paper_Roosevelt_Institute.pdf

20. https://www.federalreserve.gov/newsevents/speech/bernanke20121120a.htm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை அமைப்பு போன்றவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முன்நிபந்தனையாகக் காணப்படுகிறது. இதனைப் பொறுத்தவரை, சட்டவாக்கம் போன்ற மிகவும் முறைசார்ந்த ஒழுங்குமுறைகளினூடாக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் கூட்டுக் கடப்பாடுகள் நம்பகத்தன்மை கொண்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் அமைப்பினை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கும் உறுதியானதொரு அடிப்படையில் மத்திய வங்கியின் குறிக்கோளான விலை உறுதிப்பாட்டினைக் காத்திரமான முறையில் அடைவதற்கு வசதியளிப்பதற்கும் அவசியமானதாகும்.

தாழ்ந்த அரச அரசிறையிலிருந்து தோன்றுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளி வரட்சி மற்றும் வெள்ளம் போன்ற உள்நாட்டுத் தடைகளிலிருந்தும் அதேபோன்று பன்னாட்டுத் துறையில் ஏற்படும் பல்வேறுபட்ட நிகழ்வுகளிலிருந்தும் தோன்றுகின்ற மோசமான அதிர்வுகளின் தாக்கத்தினைத் தணிப்பதற்கான அரசாங்கத்தின் இயலாற்றலையும் தடை செய்கிறது. வெளிப்புற மற்றும் அகத்தாக்கங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் விதத்தில் இறைத்தாங்கிருப்பினை உருவாக்குவதற்கு முன்னுரிமை அடிப்படையில் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிச் செயன்முறையினைப் பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தினை இது மீண்டும் எடுத்துக்காட்டியது.

அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சியை நோக்கி கடந்த அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட வழிமுறைகள்

வலுவானதொரு அடிப்படையில் அரசிறைச் சேகரிப்புக்களை மேம்படுத்துவதற்கு கடந்த அண்மைக் காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நாம் இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம்.

கடந்த காலத்தில், அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைக் குறைத்துவிட்டது, எனவே, இதனைத் திருத்தியமைப்பதற்கு வலுவான முயற்சிகள் தேவைப்படுகின்றன. உறுதியற்ற இறைப் பெறுபேறுகள் பல தசாப்தங்களாக இலங்கையின் அனுபவமாக இருந்து வருகின்றது. இந்நிலைமையானது உத்வேகம்மிக்க இறைச் செயலாற்றத்தினைப் பேணுகின்ற கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் வெற்றிகரமான கொள்கைகளுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு மாறானதாகும். எனவே, இந்நீண்டகால கடினமான பிரச்சனையினைக் கையாள்வதற்கு வலுவான அரசியல் கடப்பாட்டினையும் உறுதியான நடவடிக்கைகளையும் கொண்ட தேசிய முயற்சிகள் எமக்குத் தேவையாகவுள்ளன. சுதந்திரம் பெற்றதிலிருந்து நாட்டின் அபிவிருத்தி வாய்ப்புக்களுக்குத் தடையாக விளங்கும் நச்சுத்தன்மை கொண்ட கட்சி அரசியலிலிருந்தும் மக்களிடையே ஆழமாகப் பதிந்திருக்கும் பாதுகாக்கப்பட்ட உரித்துக் கலாச்சாரத்திலிருந்தும் நாம் வெளியேறுவதற்குப் பொதுமக்கள் விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புவது அவசியமாகவுள்ளது.

இப்பின்னணியில், இறைத்திரட்சியை வலுப்படுத்துவதற்காக புதிய இறைக் கட்டமைப்பொன்றினையும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார முன்னேற்றங்களை எய்துவதற்கு மிகத் தேவையான இறை அளவினை உருவாக்குவதற்குமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஏற்கனவே தொடங்கியிருப்பது மிக ஊக்கம் தருவதாக அமைந்திருக்கிறது. அரசாங்கம் மிக அவ்வசியமான சீர்திருத்தங்களை ஏற்கனவே தொடங்கியுள்ளதுடன் மாண்புமிகு நிதி அமைச்சரும் அவரது குழுவும் 2016இல் எய்தப்பட்ட சிறந்த பெறுபேறுகளுக்கு உரித்துடையவர்களாக விளங்கினர்.

"வழிகாட்டல்: 2017இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்" இல் அண்மையில் நான் அறிவித்ததனைப் போன்று, இலங்கை மத்திய வங்கி பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுவதற்காக சந்தையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளின் அடிப்படையில் இரண்டு புதிய கட்டமைப்புக்களான (i) தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணுவதற்கான நாணயக் கொள்கையின் பொருட்டு நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு மற்றும் செலாவணி வீத முகாமைத்துவக் கட்டமைப்பு ஆகிய இரண்டு புதிய கட்டமைப்புக்களை நிறுவுகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டது. இக்கட்டமைப்புக்கள் இறைத்திரட்சிச் செயன்முறைக்குத் துணையாக அமையும்.

நாட்டின் வரி முறைமையினை நாம் கவனமாக ஆராயும் பொழுது, பல வரி மற்றும் வரியல்லா சட்டங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விலக்கல்கள், சலுகைகள் மற்றும் விடுப்புக்கள் போன்றவற்றின் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக வரி அமைப்பின் சிக்கலானதன்மை அதிகரித்தமைக்கு இது சான்றாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, முறைமையானது பெருமளவிற்குப் பிறழ்வுடையதாயிற்று. இது அரசாங்கத்தின் அரசிறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறியதுடன் இறுதியில் அதனைக் காத்திரமான முறையில் நிருவகிக்கவும் முடியாமல் போயிற்று. எனவே, சிக்கல் நிறைந்த தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கும் வரி முறையினை இலகுபடுத்துவதற்கும் வரி விலக்கல்களைக் குறைப்பதற்கும் பிறழ்வுகளை ஒழிப்பதற்கும் வரித் தளத்தினை விரிவுபடுத்துவதற்கும் செழிப்பினை அதிகரிப்பதற்கும் அதேவேளையில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் நிருவாக இயலாற்றலைக் கணிசமானளவிற்கு வலுப்படுத்துவதற்கும் முன்னுரிமையளிப்பது அவசியமானதாகும். இம்முன்னுரிமைகள் அரசாங்கத்தினாலும் பன்னாட்டு நிறுவனங்களினாலும் நாட்டின் வரி முறைமையினை ஆராய்ந்து விதந்துரைப்புச் செய்யும் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவினாலும் செய்யப்பட்ட பல்வேறுபட்ட பகுப்பாய்வுகளினாலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வின்றியமையாத தேவைகளையும் பின்னடைவுகளையும் அடையாளம் கண்ட பின்னர் அரசாங்கம், ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2016இன் ஏறத்தாழ 5.4 சதவீதத்தினை 2020 அளவில் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 3.5 சதவீதத்திற்குக் குறைக்கும் நோக்குடன் பேரார்வம் மிக்க அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரசாங்கம், குறிப்பாக, 2018 அளவில் ஆரம்ப நிலுவையை பற்றாக்குறையிலிருந்து மிகைக்கு மாற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டிருக்கிறது. அரசிறை மிகையொன்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு இடம்பெறும் பொழுது மீண்டெழும் செலவினத்திற்கு மேலதிகமான அரசிறையினை உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குப் பயன்படுத்த முடியும். இவ்வபிவிருத்திகள் அரச படுகடனை 2016இன் ஏறத்தாழ 76 சதவீதத்திலிருந்து 2020 அளவில் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 65 சதவீதத்திற்குக் குறைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வலுவான அரசிறையினை உயர்த்துகின்ற முயற்சிகளைக் கொண்ட இம்முழுச் செயற்பாடுகளும் நடுத்தர காலத்தில் மொ.உ.உற்பத்தியின் விகிதமாக அரசிறையை 2016இன் ஏறத்தாழ 13 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 16 சதவீதத்திற்கு உயர்த்துவதனை இலக்காகக் கொண்டிருந்தன.

பரந்தளவு சாத்தியமான வரித் தளத்தின் மீது விதிக்கப்பட்ட சாத்தியமானளவிற்கு மிகக் குறைந்த வீதத்தினைக் கொண்டிருக்கின்ற மிகச் சாதகமான உத்தம வரி முறைமை இது எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி முறைமைகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் உட்பட வரிக் கொள்கைக்கு செய்யப்பட்ட அண்மைய மாற்றங்கள் மற்றும் வருமான வரி விதிப்புக்கள் நடுத்தர காலத்தில் நாட்டில் அத்தகைய வரி முறைமைகளை நிறுவுகின்ற நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. வருமான வரி விதிப்புத் துறையில் காணப்படும் புதிய வழிமுறைகள், குறிப்பாக, வரி முறைமையினைப் படிப்படியாக மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் குறிக்கோள் யாதெனில் மற்றைய அயல் நாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இறுதியாக ஒரு சில ஆண்டுகளில் நேரடி வரிச் சேகரிப்புக்களை எய்துவதேயாகும். மாண்புமிகு பிரதமர் மறைமுக மற்றும் நேரடி வரிகளுக்கிடையே 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரையான சமநிலையொன்றினைப் பேணுவது பற்றி குறிப்பிட்டிருக்கின்றார். சுங்கத் தீர்வை அமைப்பும், முன்னர் நிலவிய நான்கு பிரிவு அமைப்பிற்குப் பதிலாக மூன்று பிரிவு தீர்வை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டமையின் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

சட்டத்தில் காணப்பட்ட சிக்கலான தன்மையும் வரிச் சட்டம் இலகுபடுத்தப்பட்டமையின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. உண்மையில், ப.நா.நிதியத்தின்படி (2016 திசெம்பர்) "தற்போதுள்ள உண்ணாட்டரசிறைச் சட்டம் (2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்) வலுவான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்குப் பெருமளவிற்கு வினைத்திறனற்றதாக இருக்கின்றது என்ற கருத்தினைப் பிரதிபலிக்கிறது. வருமான வரி முறைமையை முதலீட்டாளர் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் நிருவாகத்தினை மேற்கொள்வதற்கான உள்ளூர் வரி அலுவலர்களின் இயலாற்றலும் அதிகளவு சிக்கல் வாய்ந்த தன்மையாக விளங்கி மொ.உ.உற்பத்திக்கான வரியின் விகிதம் தாழ்வாக விளங்குவதற்குப் பங்களிக்கும் காரணியாக விளங்கியது. இதன் தற்போதைய வடிவத்தில் உண்ணாட்டரசிறைச் சட்டம் நவீன வியாபார அமைப்பினை மற்றும் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்கள் (சிறப்பாக எல்லை தாண்டிய கொடுக்கல்வாங்கல்கள்); காத்திரமான தன்மை மற்றும் வினைத்திறனற்ற வரி ஊக்குவிப்புக்களின் காரணமாக உருவாக்கப்படுகின்ற பிறழ்வுகள்; குறுகிய வரித் தளம்களை இலக்கு வைத்தல்; மட்டுப்படுத்தப்பட்ட சேகரிப்புக்கள் மற்றும் மதிப்பீட்டு அதிகாரங்கள் மற்றும் வரி செலுத்துவோரின் சவால்களை ஊக்குவித்தல் மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லாமை என்பனவற்றிற்கான போதுமானளவிற்குக் கையாளத்தக்கதாக இல்லை[21]". எனவே, உண்ணாட்டரசிறைச் சட்டத்தினை இலகுபடுத்தி நவீனமயப்படுத்தும் நோக்குடன் புதிய உண்ணாட்டரசிறைச் சட்டம் வரையப்பட்டு வருகின்றது. இது, மிகையான வரி ஊக்குவிப்புக்களை அகற்றுதல் மற்றும் வருமான மூலங்களை விரிவாக்குதல், வரித்தளம் தேய்வடைவதனைக் கட்டுப்படுத்தும் விதத்தில் எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான விதிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் வரித் தவிர்த்தல்களை ஒழித்தல்; கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட வரைபு மாதிரியினை மேம்படுத்துவதனூடாகச் சிக்கலான தன்மையினைக் குறைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக (ப.நா.நிதியம் - 2016 திசெம்பர்) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் தற்போதைய அதிகாரங்களை வலுப்படுத்தித் தெளிவுபடுத்தல் என்பனவற்றினூடாக வரித் தளத்தினை விரிவுபடுத்த உதவும். புதிய உண்ணாட்டரசிறைச் சட்டம் 2017இல் அறிமுகப்படுத்தப்படும். இந்நாட்டின் வரலாற்றில் முதற்றடவையாக, வரிச் செலவினக் கூற்றும் வரிச் செலவினத்தினைச் சிக்கனப்படுத்துவதற்கான உபாயமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வரி நிருவாக வினைத்திறனை மேம்படுத்துவதற்கான கடப்பாட்டினை அரசாங்கம் கொண்டிருக்கிறது. அரச நிதியியல் முகாமைத்துவ முறைமையில் செய்யப்படும் முன்னேற்றங்களின் மூலம் இதனை மேற்கொள்ள முடியும். வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய

21. IMF, (December 2016), "First review under the Extended arrangement under the Extended Fund Facility Criterion – Press Release; Staff Report; and statement by the Executive Director for Sri Lanka", p. 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளுக்குப் புறம்பாக, பல புதிய வழிமுறைகள், குறிப்பாக, அரசிறைச் சேகரிப்பு முகவராண்மைகளை தன்னியக்கப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் இரண்டாண்டு காலப்பகுதிக்குள் அரசிறை நிருவாகம் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையினை நிறுவியமை அரசாங்கத்தின் மிகப் பெரும் சாதனையாக விளங்குகின்றது. இது வரி செலுத்துவோர் பெறுமதிசேர் வரி, தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி, பிடித்துவைத்தல் வரி மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி போன்ற வரிகளின் கொடுப்பனவிற்காக அதேநேரக் கணனிவழியில் பதிவுசெய்வதனையும் வரிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதனையும் இது இயலச்செய்வதுடன் இதன் மூலம் தற்போதுள்ள முறைகளின் பணியாகக் காணப்படும் பல இடர்ப்பாடுகளையும் நீக்கிவிடுகின்றது. அரசிறை நிருவாகம் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையானது செயலாற்றத்தினைக் கண்காணிக்கும் மற்றும் மிக விரைவாகவும் தகவல்களின் அடிப்படையிலும் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளும் இயலாற்றலை அதிகரிப்பதனூடாக அதிகாரிகளுக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

இலங்கைச் சுங்கத்தினால் நடைமுறைக்கிடப்பட்ட தனியொரு கூரையின் கீழான முறைமை மிக முக்கியமான வர்த்தக வசதிப்படுத்தல் வழிமுறையாகும். இது, உரிமங்கள் ஒப்புதல்கள், சான்றிதழ்கள் மற்றும் விதந்துரைப்புக்களை வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும். அனைத்து எல்லை கடந்த ஒழுங்குமுறைப்படுத்தல் முகவராண்மைகளையும் அதேபோன்று ஆசிகுடா உலகம் என அழைக்கப்படுகின்ற மைய சுங்க மென்பொருள் பிரயோகத்திற்கான தளர்த்தல்கள் மற்றும் விலக்கல்களையும இணைக்கின்றது. இப்புதிய முறைமையின் முக்கிய நன்மைபெறுநர்களாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் விளங்குகின்றனர். இலக்க மயப்படுத்தலூடாக சுங்கத் தீர்ப்பனவுகளில் காணப்பட்ட அதிகரித்த வினைத்திறனும் தனியொரு முறைமைக்கு ஒருங்கிணைக்கப்பட்டமையும் தீர்ப்பனவுச் செயன்முறையுடன் இணைந்து காணப்பட்ட நேரத்தினையும் செலவினையும் குறைக்குமென்பதுடன் இதன் மூலம் கொடுக்கல்வாங்கல் செலவுகள் குறைவடைந்து போட்டித்தன்மை உயர்வடைகிறது.

அரசிறைப் பக்கத்தில், சீர்திருத்தங்களுக்குப் புறம்பாக, நிதி அமைச்சில் நிறுவப்பட்டுவரும் ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவத் தகவல் முறைமையின் கீழ் அரசாங்கத்தினால் செலவின முகாமைத்துவம் தன்னியக்கப்படுத்தப்பட்டு வருகின்றது. இம்முறைமையினூடாக அமைச்சு, நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடைமுறை வியாபாரச் செயன்முறைகளை இலகுபடுத்தவும் இறை முகாமைத்துவத்திற்கான செலவிடல்கூறினை சுயபணிகளுக்கு மாற்றுவதனூடாகவும் இலகுபடுத்த எதிர்பார்க்கிறது. உள்ளக வியாபாரச் செயன்முறைகளும் அரசாங்க நிதியியல் முகாமைத்துவத்தினைச் சூழவுள்ள வேலைப்பாய்ச்சல்களும் தன்னியக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்தையுமுள்ளடக்கிய அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வுக் கட்டமைப்பு காத்திரமான திட்டமிடலிலும் அரச நிதிகளின் கண்காணிப்பிலும் நிதி அமைச்சிற்கு உதவுவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளது.[22]

இக்கட்டத்தில், நான், தற்பொழுது இடம்பெற்றுவரும் ப.நா. நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஒழுங்குகள் பற்றி குறிப்பிட வேண்டும். அரச படுகடன் மீதான சுமையினையும் சென்மதி நிலுவை மீதான அழுத்தத்தினையும் குறைக்கும் வரிக் கொள்கை மற்றும் நிருவாகத்திற்கான அடிப்படை மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய சீர்திருத்தங்களையும் அறிமுகப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றிக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்ற வேளையில் அரசாங்கத்தின் முக்கிய சமூக மற்றும் அபிவிருத்திச் செலவிடல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மிகவும் தேவைப்பட்ட இறையளவும் விரிவாக்க நிதிய வசதி ஒழுங்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கம் வலுவான அமைப்பியல் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தது. இது இறைக் கொள்கை முகாமைத்துவம், வரிக் கொள்கை சீர்திருத்தம், வரி நிருவாக சீர்திருத்தங்கள், அரச நிதியியல் முகாமைத்துவச் சீர்திருத்தங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்கள் என ஐந்து முக்கிய பரந்த வகைகளாக வகைப்படுத்தப்பட்டன. இச்சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினைக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படின் அது நாட்டில் இலகுவானதும் மிகச் சமத்துவமானதுமான வரி முறைமையொன்றினை அறிமுகப்படுத்தவும் இறைப் பற்றாக்குறையினைக் குறைக்கவும் உறுதியானதும் அனைத்தையுமுள்ளடக்கியிருப்பதுமான வளர்ச்சிக்கு வசதியளிக்கும் விதத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீண்டும் அடையும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கினை மீளக் கட்டியெழுப்பவும் உதவும்.

ஆர்வலர்களிடமிருந்து தேவைப்படும் ஆதரவு

நாங்கள் எமது உபாயத்தினை மாற்ற வேண்டிய தேவை பற்றி ஒருவர் வாதிட முடியும். வியாபாரத்தினை மேற்கொள்வதிலிருந்து வழமை போன்று விலகிச் செல்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. மீட்புக் கொள்கைகள் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் அது தொடர்பான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. நாம் சரியான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்ற போதும் பயணம் சவால் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும்

22. Under the RAMIS, the MOF has launched a new web portal while User Acceptance Testing (UAT), which includes Treasury management, revenue management, budget appropriation, purchasing management, expenditure management, general ledger and system administration, in MOF and the Ministry of Health as a pilot project.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான பெறுபேறுகளை எய்துவதற்கும் அனைத்து ஆர்வலர்களினதும் பொதுமக்களினதும் ஆதரவு அவசியமாகும். குறிப்பிடத்தக்களவு தன்மைகளைக் கொண்ட தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசிறை நிருவாக முறைமை நிறுவன ரீதியான இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் கணக்காளர்கள் வரி ஆலோசனையாளர்கள்/ தொழில்முறையாளர்கள் உள்ளிட்ட பல மக்களினாலும் ஆற்றப்படும் பல்வேறுபட்ட வகிபாகங்களையும் அபிவிருத்தி செய்தல் என்பனவற்றை இது பாராதீனப்படுத்துகின்றது. இதனை வரி செலுத்துவோர் உள்ளிட்ட தனியார் துறையிலுள்ள மற்றையவர்களின் ஆதரவுடன் நிறைவு செய்வது அவசியமானதாகக் காணப்படுகின்றது.

பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் வரி விதிப்புக் கற்கைநெறியானது பயிற்சியளித்தலில் ஈடுபட்டிருப்பதுடன் தொழில்சார் நிபுணர்கள் மற்றும் வரி நிபுணர்களுக்குத் தேவையான அறிவினையும் நிபணத்துவத்தினையும் வழங்குகின்றது. இம்முழுச் செயன்முறைகளிலும் இது மிகவும் முக்கியமானதொரு பணியாகும். நாட்டின் சட்டக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றவாறு, வாடிக்கையாளர்களும் வரி செலுத்துவோரும் அவர்களது வரிக் கடப்பாடுகளைப் பின்பற்ற வேண்டுமென அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதன் மூலம் நீங்கள் மிகப்பெரும் வகிபாகத்தினை ஆற்றுகின்றீர்கள். வரி விதிப்பு பாடசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற பயிற்சியும் வழிகாட்டலும் இத்துறையில் இயலாற்றலைக் கட்டியெழுப்புவதில் மிக முக்கியமான வகிபாகத்தினை மிகத் தெளிவாக ஆற்றுகின்றது. பகுப்பாய்வுகளை வழங்குதல், மதிப்பீட்டு ஆதரவு, எதிர்வுகூறல்களை வழங்குதல் மற்றும் நாட்டில் பொருத்தமானதும் சிறந்ததுமான வரி விதிப்புக் கலாச்சாரத்தினை உறுதிப்படுத்துதல் என்பனவற்றின் பொருட்டு உங்கள் தேர்ச்சியைப் பயன்படுத்துவது அளவற்றதொரு நடவடிக்கையாகும். கம்பனி வாடிக்கையாளர்களின் பின்னணியில் இது மிகக் குறிப்பிடத்தக்கதாக இருப்பதுடன் இவர்கள் நாட்டின் வரி அரசிறைச் சேகரிப்பின் குறிப்பிடத்தக்கப் பங்கிற்கும் பங்களிக்கின்றனர்.

இக்கட்டத்தில், வரி ஆலோசனை தொடர்பில் சில முக்கிய குறிப்புக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். வரி மதியுரை எனவும் குறிப்பீடு செய்யப்படும் வரி ஆலோசனை, வரிச் சட்டத்தில் நன்கு பயிற்சி பெற்ற ஆட்களின் பணியுடன் தொடர்புபட்டது என்பது எனக்குத் தெரியும். அரசாங்கத்தின் பரந்தளவிலான வரிச் சட்டவாக்கங்கள் மற்றும் ஏனைய நிதியியல் விடயங்களுக்கு இணங்கியொழுகுவது தொடர்பில் தொழில்சார் நிபுணத்துவ நிறுவனங்கள் தனிப்பட்டவர்கள், குடும்பங்கள், தனிப்பட்ட முறையில் சொந்தமான வியாபாரங்கள் என்பன உள்ளிட்ட வாடிக்கையாளர்களுக்கு மதியுரை வழங்குவதே அவர்களின் பணியாகும். வியாபாரங்கள் பற்றிய அதேபோன்று தனிப்பட்டவர்கள் பற்றிய ஒழுங்குவிதிகளை விளங்கிக் கொள்வதற்கும் அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

உலகளாவிய ரீதியில், வரி ஆலோசனை ஒரு பணியாக இருப்பதுடன் இது பெருமளவு கௌரவம் மிக்க விதத்தில் வழங்கப்பட வேண்டியதாகவும் காணப்படுகிறது. பணி வழங்குவோர் கைத்தொழிலில் குறிப்பிடப்பட்டவாறு வியாபாரத்தின் சட்ட ரீதியான மற்றும் ஒழுக்க நடத்தையுடன் கூடிய விதத்தில் நியமங்களுடன் இணங்கிச் செல்லும் அவர்களுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். அநேக நாடுகளில் தொழில்சார் நியமங்களுக்கும் ஒழுக்க நடவடிக்கைகளுக்கும் அடித்தள அளவுக்குறியீடுகள் காணப்படுகின்றன. இப்பின்னணியில், வரி ஆலோசனைப் பணியினை வழங்குபவர்கள் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வரி நிலுவைகளைச் செலுத்தும்படியும் வரி ஏய்ப்புக்களை மேற்கொள்ள வேண்டாமெனவும் நியாயமற்ற வரிப் பிணக்குகளைத் தொடர வேண்டாமெனவும் வரிக் கொடுப்பனவுகளைத் தேவையற்ற விதத்தில் தாமதமாக்கும் நோக்குடனான தந்திரங்களில் ஈடுபட வேண்டாமெனவும் ஆலோசனை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று, வரி வினைத்திறனை உறுதிப்படுத்தும் நோக்கில் வியாபார மாதிரிகளில் பொருத்தமான மாற்றங்களுடன் வரித் திட்டமிடலின் மீது ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. திறமையும் புத்திசாதுரியமும் மிக்க வரி ஆலோசனையாளர்கள் வரி முறைமைகளை மேம்படுத்துவதற்கான அவர்களது சிறந்த ஆலோசனைகளை/ மாற்று வழிகளை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு உதவமுடியும். அவர்கள் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சியை எய்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஒவ்வொருவரும் அவர்களது சுயவிருப்பத்தின் அடிப்படையில் தெளிவாக விளங்கிக் கொண்டவாறு வரி நடைமுறைப்படுத்தலை வலுவாக மேற்கொள்வதன் மூலம் பெறுமதிமிக்கப் பங்காளர்களாக முடியும். வரி ஆலோசனைப் பணிகளின் மதிப்பார்ந்த நடவடிக்கைகள் அரசிறையின் அதன் நியாயமான பங்கினைச் சேகரித்துக் கொள்வதற்கு அரச சுங்கத்தினை இயலுமைப்படுத்துவதுடன் இதன் மூலம் எதிர்காலத்தில் இறைப் பெறுபேறுகளில் கணிசமான முன்னேற்றங்கள் தோற்றுவிக்கப்படும்.

முடிவுரைக் குறிப்புக்கள்

சில முக்கியமான அம்சங்களை வலியுறுத்துவதன் மூலம் இன்றைய எனது விரிவுரையினை முடிவுறுத்திக் கொள்ள விரும்புகிறேன். இறைப் பெறுபேறுகளை மேம்படுத்தும் தேவை நாட்டிற்குக் காணப்படுகின்றது. இறைத்திரட்சி இன்றியமையாததெனினும் இடர்ப்பாடுமிக்கதொரு செயன்முறையாகும். திரட்சிக்கான தேவையை அடையாளம் காண்பது ஒப்பீட்டு ரீதியில் சுலபமானது. எனினும், நடைமுறையில் காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்துவது சவால்மிக்கதாகும். இருப்பினும் கூட, நாட்டின் அரச நிதியினை மீண்டும் சரியான வழியில் கொண்டு செல்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்திரட்சியின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுவது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனினும், இது குறிப்பாக ஆரம்ப காலத்தில் குறிப்பிடத்தக்களவு அரசியல் மற்றும் பொருளாதாரச் செலவுகளையும் உள்ளடக்கியிருக்கும். ப.நா. நிதியத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளரான றொட்டிகோ த ரட்டோ "திரட்சியின் ஆரம்பச் செலவினைக் கட்டுப்படுத்த முடியும். தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதில் நன்கு வடிவமைக்கப்பட்ட இறைச் சீர்திருத்தங்கள் இச்செலவுகளை குறுங்கால நன்மைகளாகவும் மாற்றியமைத்துவிடக்கூடும். உண்மையில் இந்நன்மைகள் எப்பொழுதும் ஒரே அளவில் கிடைக்கத்தக்கதாக இராது; அத்துடன் நம்பிக்கையினையும் நம்பகத்தன்மையினையும் உருவாக்குகின்ற சூழ்நிலைகள் பெருமளவு வாய்ப்புக்களை வழங்குகின்றனவாக விளங்குகின்றன. எனினும், சூழ்நிலைகள் சரியானவையாக இருப்பின் இறைத்திரட்சியின் செயற்பரப்பு நியதிகளில் அது வலுவானதாகவும் மற்றைய கொள்கைகளுடன் இணைந்ததாகவும் இருக்குமிடத்து அதனால் உடனடியான நன்மைகளை உருவாக்க முடியும் என்பதனை பன்னாட்டு அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன"[23] எனக் குறிப்பிடுகின்றார்.

அரசிறையினை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதனை நாம் காண்கிறோம். இதனை, தொடர்பான நிறுவனங்களிலிருந்தான அதிகரித்த பங்களிப்பு, வலுவான கொள்கைப் பகுப்பாய்வுகள், மேம்பட்ட முகாமைத்துவம் மற்றும் காத்திரமான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் என்பன மூலம் மேலும் ஆதரவளிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இது, சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படும் தலையீடுகளினூடாக வரிக் கொள்கையினையும் வரி நிருவாகத்தினையும் மேலும் மேம்படுத்த உதவுவதுடன் இதன் மூலம் சமமான அரசிறை உருவாக்கமும் இயலுமைப்படுத்தப்படுகிறது.

ஒட்டுமொத்த பற்றாக்குறை இலக்கினை மொ.உ.உற்பத்தியின் 4.6 சதவீதத்திற்குக் குறைத்தமையின் மூலம் இறைத்திரட்சிக்கான அரசாங்கத்தின் கடப்பாடுகள் 2017 வரவு செலவுத்திட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. வரவு செலவுத்திட்டம் வெளிநாட்டுத் துறையில் பல நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுவதனை எடுத்துக்காட்டுகிறது. இது அரசிறை மதிப்பீடுகளில் எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். எனவே, அரச நிதியின் பாராளுமன்றம் கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதற்கான கடப்பாட்டினை அரசாங்கம் கொண்டிருப்பதனால், எந்தவொரு காலாண்டு முடிவிலும் ஒரு மாதத்திற்கிடையில் அரசாங்கம் காலாண்டுச் செலவினத்தினையும் வருமானப் பெறுபேறுகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். வருமானத்தில் வீழ்ச்சி காணப்படுமாயின் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் செலவினம் மீண்டும் சீராக்கப்படும். இதன் மூலம் இறைத்திரட்சிப் பாதைக்கான அரசாங்கத்தின் கடப்பாடு பிரதிபலிக்கப்படுகிறது. மேலும், வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதனை மேற்பார்வை செய்வதற்காக தனியார் துறை மற்றும் அரச துறை இரண்டிலுமிருந்தான அங்கத்தவர்களை உள்ளடக்கிய குழுவொன்றினை நியமிப்பதற்கு வரவு செலவுத்திட்டம் 2017 முன்மொழிந்திருக்கிறது. இறைத்திரட்சியின் தேவையினையும் அது காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினையும் அரசாங்கம் ஏற்கனவே தெளிவாக அடையாளம் கண்டு அதனை வலியுறுத்தி வருவதனை கருத்திற் கொள்ளும் பொழுது இவை மிகவும் முக்கியமான வழிமுறைகளாகக் காணப்படுகின்றன.

படுகடன் மட்டத்தினைக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைப்பதற்கு இறைத்திரட்சி மாத்திரம் போதுமானதல்ல என்பதனால், இம்முயற்சியை நிறைவு செய்வதற்கு ஏனைய கொள்கைத் தேர்வுகளும் அவசியமாகின்றன. எனவே, படுகடனைக் குறைப்பதற்கு அரச செலவிடலில் வினைத்திறனை மேம்படுத்துதல், எதிர்பாராத பொறுப்புக்களை கட்டுப்படுத்துதல், அரச துறையினை ஒழுங்குமுறைப்படுத்தல், தீவிரமான படுகடன் முகாமைத்துவம் மற்றும் படுகடன் மீளமைப்பு மற்றும் குறிப்பாக, அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பான அமைப்பியல் சீர்திருத்தங்களை அதிகரித்தல் உள்ளிட்ட அனைத்தையுமுள்ளடக்கிய உபாயமொன்றின் மூலம் இறைத்திரட்சிக்கான தேவைகள் முழுமைப்படுத்தப்படல் வேண்டும். எதிர்காலத்தில் படுகடன் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கு நிதி அமைச்சில் முன்மொழியப்பட்டுள்ள தனியான படுகடன் முகாமைத்துவப் பிரிவினை நிறுவுவதும் புதிய பொதுப்படுகடன் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதும் மிக முக்கியமான பங்கினை ஆற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வங்கியின் நாணயக் கொள்கையினை நடத்துவதற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் அக்கறைகளின் முரண்பாட்டையும் இது நீக்கிவிடும்.

இவ்விளக்கவுரையானது இறைக் கொள்கை, நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கை, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு போன்ற முக்கிய கருதுகோள்களிடையேயான முக்கிய தொடர்புகளையும் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்குவதில் அவற்றின் முக்கியத்துவத்தினையும் எடுத்துக்காட்டுவதற்கு எதிர்பார்க்கிறது. இது மிக முக்கியமானதொரு கூட்டுச் செயற்பாடாகும். இதில் வெவ்வேறுபட்ட அளவுகளில் நாமெல்லோரும் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறோம். இது ஒரு தேசிய முயற்சியாக இருக்க வேண்டுமென்பதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிறுவனமும் அதேபோன்று தனிப்பட்டவர்களும் இத்தேசிய முயற்சி தொடர்பில் பல்வேறு பொறுப்புக்களையும் கொண்டிருக்கின்றனர். இம்முயற்சிகளின் இறுதிக் குறிக்கோள் வலுவானதும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை எய்துவதேயாகும். இது தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் வருவாய்களை அதிகரிப்பதற்கும் இலங்கை

(தொடர்ச்சி.....பக்கம் 20)

23. Rato, Rodrigo de; (2004), "Benefits of Fiscal Consolidation", 25 November, IMF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்பாடு மற்றும் மீளெழுச்சிக்கான இறை இடைவெளி

ஆண்டறிக்கை - 2015
இலங்கை மத்திய வங்கி

அறிமுகம்

பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு உதவுவதற்கும் அதிர்வுகளை எதிர்கொள்வதற்கு பொருளாதாரத்தின் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கும் இறை இடைவெளியை உருவாக்குவது, குறிப்பாக, நிதியியல் நெருக்கடிக்குப் பின்பு உலகம் முழுவதிலுமுள்ள பல இறை அதிகாரசபைகளின் கவனத்தைப் பெற்றிருக்கிறது. முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் இரண்டிலும் தடையுடனான இறைச் சூழல்கள் நிச்சயமற்ற உலகளாவிய அபிவிருத்திகளிலிருந்து தோற்றம் பெற்றுவரும் அழுத்தங்கள், அதிகரித்துச் செல்லும் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் மற்றும் குடித்தொகையியல் மாற்றங்கள் இறைத் தொழிற்பாடுகளின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மைக்கு தொடர்ந்து சவால் விடுவதால் அரச வரவு செலவுத்திட்டத்தின் இடைவெளியை உருவாக்குவதில் தூண்டப்பட்ட ஈடுபாடுகளைக் கொண்டிருந்தன. இலங்கை போன்ற தோற்றம் பெற்றுவரும் நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடுகளின் வரவு செலவுத்திட்ட செயல்முறைகள் அரசின் எதிர்கால இறை நிலைமைக்கு தேவையற்ற இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்காமல் விரைந்த அபிவிருத்திக்கான தேவையின் பின்னணியில் அழுத்தத்திற்குட்பட்டன. இது இலங்கையில் போதுமான இறை இடைவெளியைப் பேணுவது தொடர்பான கேள்வியை எழுப்பியிருக்கிறது.

ஹெலர் (2005) இறை இடைவெளியை "நிதியியல் நிலைமையின் உறுதிப்பாட்டிற்கு அல்லது பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்கு ஆபத்தினை ஏற்படுத்தாது விருப்பமான நோக்கத்துக்காக மூலவளங்களை வழங்குவதற்கு அரசை அனுமதிக்கும் வரவு செலவுத்திட்ட வாய்ப்பு" என வரைவிலக்கணம் செய்கிறார். வேறு விதத்தில் கூறுவதாயின், இறை இடைவெளி என்பது, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மோசமாகப் பாதிக்காத விதத்தில், அரசின் செலவிடல், அரசிறை மற்றும் கடன்பாட்டுத் தேர்வுகள் தொடர்பாக தீர்மானிப்பதற்கு அரசுக்கு நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதற்கு மேலதிக மூலவளங்களின் கிடைக்கும் தன்மையினைக் குறிக்கிறது. இறை இடைவெளியின் முக்கிய தீர்மானக் காரணிகள் அரச செலவினத்தின் உள்ளடக்கம் மற்றும் போக்கு, வரி விதிப்பதற்கான மனோபாவம், கடன்படுவதற்கான மனோபாவம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பனவற்றை உள்ளடக்குகிறது. எனவே, இறை இடைவெளியை அரசிறையை அதிகரிப்பதன் மூலம், செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து மூலவளங்களைக் கடன்படுவதன் மூலமும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதன் மூலம் உருவாக்க முடியும். இறை இடைவெளியை உருவாக்கத்தினை இறையின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மைக்காக எந்தவிதத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது. அரசு அதன் செலவின நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியிடுகின்ற மற்றும் அதன் படுகடனின் வட்டியைச் செலுத்துவதற்கான அதன் குறுகிய கால மற்றும் நீண்ட காலத்தில் இயலாற்றலைக் கட்டாயம் உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கையின் அரச வரவு செலவுத்திட்டத்தின் அமைப்பு

இறுக்கமான மூலவளத் தடைகளின் சூழலில் செலவினக் கோரல்களுக்குப் போட்டியிடுதல் அண்மைக் காலத்தில் இலங்கையின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளின் பண்பாக இருந்து வருகின்றது. குறைந்த அரசிறைத் திரட்டல் மற்றும் நிதியியல் நிலைமைகளை இறுக்கல் என்பனவற்றைக் கவனத்திற்கொள்கையில் செலவினத்துக்கான தேவையின் அழுத்தம் அடுத்தடுத்து வந்த அரசுகள் உயர் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகளை அறிவிப்பதற்குக் காரணமாயிற்று. 2010 - 2015 காலப்பகுதிக்கான இலங்கையின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6 சதவீதத்தில் காணப்பட்டது. அரசின் அரசிறை மற்றும் செலவினத்தின் அமைப்பின் பரீட்சிப்பு இறை அதிகாரசபைகளை சவாலுக்குட்படுத்திய கரிசனைகளைத் தோற்றுவித்தது. 2010 - 2015 காலப்பகுதியில் அரச செலவினம் சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 18.8 சதவீதத்தில் பேணப்பட்டது. அரசின் நடைமுறைச் செலவினம் இக்காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13.7 சதவீதமானளவில் தளம்பல் நிலையில் காணப்பட்டபோதும் வட்டிக் கொடுப்பனவுகள், வரவு செலவுத்திட்டத்தின் "கட்டாயமல்லாத" செலவிடும் கூறு மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம், நடைமுறைச் செலவினப் பங்குகளின் நியதிகளில் நிலையாக தொடர்ந்து விளங்கி, மீண்டெழும் செலவினத்தின் மூன்றில் இரண்டு பங்குக்கும் கூடுதலான அளவுக்கு வகை கூறியது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் 2010 - 2015 காலப்பகுதியில் சராசரியாக முறையே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.7 சதவீதத்துக்கும் 4.4 சதவீதத்துக்கும் வகைகூறின. குடும்ப அலகுகளுக்கான மாற்றல்கள் மற்றும் முக்கிய கூறான வறுமை ஒழிப்பை உள்ளடக்கும் வரவு செலவுத்திட்டத்தின் மாற்றல் கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரிச் செலவினமும் இக்காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.0 சதவீதத்திற்கு வகைகூறின.

மேற்கூறிய பின்னணியில், ஏனைய அழுத்தமான தேவைகளை உள்ளடக்குவதற்கான வரவு செலவுத்திட்டத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள குறுகிய வழி தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இப்பின்னணியில் இறை அதிகாரசபைகள் முகம் கொடுக்கும் இக்கட்டான நிலைமை கல்வி மற்றும் நலம் போன்ற முன்னுரிமை வாய்ந்த துறைகளில் அரசால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை அவதானிக்கும் போது தெளிவாகத் தெரிகிறது. தொழிற்பாட்டு அடிப்படையில் செலவினத்தின் பரீட்சிப்பு, வரவு செலவுத்திட்டத்தினூடாக அளிக்கப்பட்ட மொத்த நிதியங்களில் சராசரியாக 17 சதவீதத்தை மட்டுமே கல்வி மற்றும் நலத் துறைகள் பெற்றதைக் காட்டுகின்றது. 2015இல் முன்னேற்றமொன்று காணப்பட்ட போதிலும் 2010 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் இவை முறையே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதத்துக்கும் 1.3 சதவீதத்துக்கும் வகைகூறின. கல்வி மற்றும் நலத்தின் மீதான செலவினம் மனித மூலதனத்துக்கான உயர் இலாபங்களை வழங்குவதன் மூலம் நீண்ட காலத்தில் நன்மைகளை உருவாக்குமென்பதனால் நலம் மற்றும் கல்விச் செலவினத்தை அதிகரிப்பதற்கு வாதம் முன்வைக்கப்படலாம். எனினும், தேர்ச்சி ஆற்றலை மட்டுப்படுத்திய வரவு செலவுத்திட்டத்தின் தற்போதைய செலவின அமைப்பைக் கருத்திற் கொள்கையில் இந்நோக்கத்துக்காக இறை இடைவெளி இயலுமையினை உருவாக்குவது அரசுக்கு அவசியமாகும்.

அரசிறைப் பக்கத்தில், அரசின் அரசிறைச் சேகரிப்பு மொத்த செலவினத்தை விட மிகவும் குறைவாக விளங்கி மீண்டெழும் செலவினத்தைக் கூட ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறை 2010 - 2015 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12.4 சதவீதமளவிற்கு குறைவாக விளங்கியது. குறைந்த வருமானச் சேகரிப்பு பெரும்பாலும் நாட்டில் நலிவான வரி சேகரிப்பால் ஏற்பட்டது. வரி அரசிறை/ மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமும் இவ்வாண்டில் ஒரு முறை மட்டும் செலுத்தப்பட்ட பல வரிகளின் விதிப்பனவின் பகுதிக் காரணத்தால் 2015இல் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி விகிதம் 12.1 சதவீதத்துக்கு உயரமுன்பு 2014இல் 10.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. இலங்கையின் வரிச் செயலாற்றம் அதன் பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் நலிவானதாகக் காணப்பட்டது. பல்வேறு விலக்களிப்புக்கள் காரணமாக வரி முறைமையின் குறைந்த நெகிழ்ச்சித்தன்மை, வரி தவிர்ப்பு மற்றும் நலிவான வரி நிருவாகம் என்பன மோசமான அரசிறைச் செயலாற்றத்திற்கான சில காரணங்களாகும்.

உயர் செலவின மட்டங்களுடன் சேர்ந்த குறைந்த அரசிறைத் திரட்டல் உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையுடன் இணைந்து உயர் அரச படுகடன் மட்டங்களை விளைவித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரச படுகடன் 2015இல் 76 சதவீதத்துக்கு அதிகரித்தது. இது அதிகரித்த படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை தேவைப்படுத்தியதுடன் அதன் மூலம் இது இறைத் தொழிற்பாடுகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தியது. தற்போது படுகடன் பணிக் கொடுப்பனவுகள் வரி மற்றும் வரியல்லா மூலங்களூடாக அரசால் உருவாக்கப்பட்ட அரசிறையின் ஏறத்தாழ 90 சதவீதத்தை ஈர்த்துக் கொண்டன. பணவீக்கமல்லாத மூலங்களிலிருந்து உள்நாட்டில் கடன் பெறுவதற்குப் பெருமளவு வழிவகைகள் இல்லாததால் உயர்மட்டத்திலான வெளிநாட்டு படுகடன்களை வெளிநாட்டு அதிர்வுகளுக்கு நாடு பாதிப்புக்குள்ளாகும் தன்மையை அதிகரிக்கிறது. இறை இடைவெளி போதாமல் இருப்பது, பொருளாதாரத்தின் அதிகரித்துவரும் மூலவளத் தேவையினை உள்ளடக்குவதற்கு கடன்பாடுகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் ஆற்றலின்றி இருப்பதனை பிரதிபலிப்பதாகவுள்ளது.

முன்னோக்கிய பாதை

தேர்ச்சியுள்ள இறைத் தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பு போதுமானளவில் இல்லாமை அரச வரவு செலவுத்திட்டத்தினுள் சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலிருந்தான புதிய கேள்விகளை உள்ளடக்குவது மிகவும் கடினமான பணியாக மாறியுள்ளது. மேலதிக கடன்பாடுகளைப் பெற்றுக்கொள்வதில் அரசின் ஆற்றலின்மையைக் கவனத்திற்கொண்டு, வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் செலவின அமைப்புக்களூடாக இறை இடைவெளி கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும். இறை இடைவெளியை உருவாக்குதல் தற்போதைய வரி அமைப்பின் அனைத்தையுமுள்ளடக்கிய சீர்திருத்தமொன்றினை தேவைப்படுத்துகிறது. அரசிறை திரட்டல் முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம், ஆகக்குறைந்தது இலங்கையின் அயல் நாடுகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் இறைக் கொள்கை வரி/ மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டிருக்க வேண்டும். வரிச் சீர்திருத்தங்கள் வரித்தளத்தை விரிவாக்கும் நோக்குடனும் மற்றும் அதிகரித்துச் செல்லும் இணங்குவிப்புக்களையும் கவனத்திற்கொண்டு மேற்கொள்ளப்படல் வேண்டும். செலவினப் பக்கத்தில், இறை இடைவெளியை கவனத்தில் கொள்வது நடுத்தரகால செலவின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பின் பின்னணியில் மேற்கொள்ளப்படவேண்டும். இது அரசின் செலவின முன்னுரிமைகளில் அனைத்தையுமுள்ளடக்கிய பார்வையினைக் கொண்டிருக்கிறது. அதேவேளை, நாட்டால் உறப்படும் செலவினம் தொடர்பாக பணத்துக்கான பெறுமதியைப் பெறுவதற்கு செலவின முகாமைத்துவத்தின் வினைத்திறன் மேம்படுத்தப்படவேண்டும். இப்பின்னணியில், ஒவ்வொரு செலவின விடயமும் பொருளாதார, அரசியல், சமூக மற்றும் அரசின் ஏனைய பரிந்துரை நியதிகளில் கவனமாக மீளாய்வு செய்யப்படவேண்டும். மேலும், கிரமமான வரவு செலவுத்திட்டத்துக்கு வெளியே மேற்கொள்ளப்படும் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்படும் செலவிடல் தீர்மானங்கள் மட்டுப்படுத்தப்படல் வேண்டும். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் நிதியியலின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை மேம்படுத்துதல் மற்றும் வரவு செலவுத்திட்டம் மீது அவை தங்கியிருப்பதைக் குறைத்தல் என்பன மூலம் அரசு அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றத்தையும் முன்னேற்ற வேண்டும். உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கும் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்தியாவசிய சீர்திருத்தங்களுக்கு ஏற்படக்கூடிய தடைகளை, தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களூடாக பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து ஆர்வலர்களுடன் அரசின் உரிய பங்கேற்றல் மூலமும் தணித்தல் வேண்டும்.■

பக்கம் 17இன் தொடர்ச்சி

நீடித்தநிலையான வளர்ச்சியை நோக்கிய அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி ....

மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கும் மிக முக்கியமானதாகும்.

அவ்வாறு மேற்கொள்ளும் போது, அரசாங்கத்தின் நோக்கம் தொடர்பில் ஆர்வலர்கள், நிதியியல் சந்தைகள் மற்றும் பொதுமக்களிடையேயான சரியான புரிந்துணர்வு மிக முக்கியமானதாகும். இது போன்ற முன்னரங்கக் கூட்டம் இறைத்திரட்சி போன்ற முக்கியமான பிரச்சனைகளில் ஆழ்ந்த சிந்தனை வெளிப்பாடுகளையும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களையும் ஊக்குவிக்கின்றது. அத்தகைய நடவடிக்கைகள் அவசியமான சீர்திருத்தங்களின் மீது இணக்கப்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவது மட்டுமன்றி கொள்கை வகுப்புக்களின் தரத்தினை மேம்படுத்தவும் உதவுகிறது.

இறுதியாக, இறைத்திரட்சியை எய்துவதற்கும் படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளுக்கான பெருமைக்கு அரசாங்கம் உரியதாகும். இது மத்திய வங்கி பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கான நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கையினைக் காத்திரமாகவும் சுயாதீனமாகவும் மேற்கொள்வதற்கான கடின முயற்சிகளுக்கான பெருமளவு வாய்ப்புக்களைக் கொண்டிருந்தது மட்டுமன்றி, தாழ்ந்த பெயரளவு வட்டி வீதங்களை வழங்கியதுடன் பெருமளவு ஊக மற்றும் நிலையான அடிப்படைகளில் கூடியளவு உறுதித்தன்மை வாய்ந்ததும் போட்டித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்தினையும் நிலையான அடிப்படையினையும் வழங்கியது. இது, மிகக் கூடியளவு தூண்டுதலளிக்கும் வியாபாரச் சூழலை மிகத் தெளிவாக உருவாக்கும்.■

தங்களுக்கு நன்றி!

மீளாய்ந்தவர்களுக்கு எமது நன்றிகள்

இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களம், செய்தி அளவீடு 2017 சனவரி - மாச்சு (தொகுதி 37 எண் 01) வெளியீட்டிற்குப் பங்களித்த மீளாய்ந்தவர்களுக்கு அதன் நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

திரு. எஸ். ஜே. ஏ. ஹந்தகம

உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி

முனைவர் (திருமதி) வை. எம். இந்திரரத்ன

பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

இராஜகிரிய, [illegible] இல் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கி அச்சகத்தில் அச்சிடப்பட்டு [illegible] அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியினால் வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org